Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | புரட்டாதி-13 | 29-09-2004 | புதன்கிழமை | ஓசை -224




### – சந்திரிகா அரசு மேற்கொள்ளும் பிரச்சாரம் போல் –

# பேச்சுக்களை முன்னெடுக்கப் புலிகள் தடையல்ல

# சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துவோம்!

### –ஐரோப்பா புறப்படும் முன் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**சிறிலங்கா சனாதிபதியும் , அவரது அரசாங்கமும் விடுதலைப்புலிகள் தான் பேச்சு வார்த்தைகளுக்கு தடையாக இருப்பதாகவும் தாமதங்களுக்குக் காரணம் எனவும் ஒரு தவறான பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளது. ஆனால் இது தவறென்பதையும் உண்மைக்கு மாறானது என்பதையும் சர்வதேச சமூகத்திற்குத் தெளிவாக எடுத்துச் சொல்வோமென ஐரோப்பிய நாடுகளுக்குப் புறப்படுமுன் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

ஊடகவியலாளருக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் வழங்கிய பேட்டியின் விபரம் வருமாறு.

★இந்தப்பயணத்தின் போது உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட வரைபில் ஏதாவது மாற்றம் ஏற்படுமா?

ஏற்கனவே இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்கின்ற வரைபு மிகவும் உறுதியாகவும், காத்திடமாக வும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அது எங்களுடைய சட்ட நிபுணர்கள் சர்வ தேச அளவிலான சட்ட நிபுணர்கள் ஆகியோரால் தயாரிக்கபட்டு,

(11ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கக் கூட்டமும் நடுகல் திரைநீக்கமும்

கடந்த 28.09.1996 அன்று சத்ஜெய 3 இராணுவ நடவடிக்கையின் போது வீரச்சாவடைந்த 2ஆம் லெப். வேலவன் (சிவபாதம் சிறீஸ்கந்தராசா (யாழ்மாவட்டம்) என்ற மாவீரரின் திருவுருவப்படம் நேற்றுப் பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துவரப்பட்டு அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் மக்கள் வணக்கத்திற்காக வைக்கப்பட்டது.

தொடர்ந்து தெல்லிப்பளைப் பிரதேசப் பொறுப்பாளர் சரவணன் தலைமையில் நடைபெற்ற வீரவணக்கக்கூட்டத்தில் திருவுருவப் படத்திற்கு மாவீரர் வேலவனின் பெற்றோர் ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தனர். அளவெட்டி சிக்கனக்கடனுதவி கூட்டுறவுச் சங்கத் தலைவி திருமதி. வை.சுப்பிரமணியம், மகாஜனசபைப் பொருளாளர் ஆகியோரும் மலர்மாலை அணிவித்தனர்.

யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், மகாஜன சபைத் தலைவர் சுப்பிரமணியம்

(12ஆம் பக்கம் பார்க்க)



## மட்டு. பனிச்சங்கேணியில் புலிகளின் காவலரண் மீது தாக்குதல்

### - பெண் ஒருவர் பலி; ஒருவர் காயம்

மட்டக்களப்பு பனிச்சங்கேணியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முன்னணிக் காவலரண் மீது நேற்று இனந் தெரியாதோர் ஆர்.பி.ஜி தாக்குதல் நடத்தியுள்ளனர். காலை 9.00 மணிக்கும் 10.00 மணிக்கும் இடை யில் இடம் பெற்ற இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளின் காவலரணுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

புலிகளின் காவலரணுக்கு மேலாகச் சென்ற ஆர்.பீ.ஜி எறிகணையின் சமநிலைச் செட்டை ஒரு பெண்மணியின் தலையில் காயத்தை ஏற்படுத்தியது. ஆர்.பி.ஜி எறிகணை வெடித்ததில் இன்னுமொரு பெண்மணி காயமடைந்தார்.

காயமடைந்த இருவரும் வைத்திய சிகிச்சைக்காக வாழைச்சேனை வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப் பட்டனர். இதில் திருமதி.கணபதி காளிப் பிள்ளை (வயது-45) என்பவர் மரணமடைந்துள்ளார். உதயச் செல்வி தவேந்திரன் (வயது 32) என்பவர் சிகிச்சை பெற்று வருகிறார். இவர்கள் இருவரும் கோயில் குடியிருப்பு பனிச்சங்கேணியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் தொடர்பாக விடுலைப்புலிகள் மட்டக்களப்பு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முறையிட்டுள்ளனா.

## இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெறும் கொலைகள் குறித்து புலிகள் அக்கறை கொண்டுள்ளனர்

### - அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

தற்போது நடக்கும் கொலைகள் பற்றி தாங்கள் சமமான அக்கறை கொண்டுள்ளதாக தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.

நேற்று தனது குழுவினருடன் ஜெனிவாவிற்குப் புறப்படும் முன்னர் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கரைச் சந்தித்து உரையாடிய போதே தமிழ்ச் செல்வன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும்

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி யில் நடைபெறும் கொலைகள் குறித்து விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் சமமான அக்கறையுடைய தாகவே இருக்கிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)



கண்காணிப்புக்குழுத்தலைவர், அரசியல்துறைப்பொறுப்பாளர் சந்திப்பு

## யாழ்.கொலைச் சம்பவங்களுடன் புலிகளுக்குத் தொடர்பில்லை

### யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ்.குடாநாட்டில் இடம் பெற்ற கொலைச் சம்பவங் களுக்குப் புலிகளே காரணம் என ஈ.பி.டி.பி.தேச விரோதக் கும்பல் பொய்க் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தியுள்ளது. இக் கொலைச் சம்பவங்களுக்கும் எமது இயக்கத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழக் குற்றவியல் நடைமுறைச்சட்டம் வரும் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ நீதி நிர்வாகத் துறையின் சட்டவாக்கச் செயலகத்தினால் தமிழீழக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் வரும் முதலாம் திகதிலியிருந்து நடைமுறைக்கு வருகிறது.

இச்சட்டம் 2004ஆம் ஆண்டின் முதலாம் எண்சட்டமாக வெளிவருகிறது. தமிழீழத்தில் தமிழீழ நீதிநிர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தென்னமரவடி தமிழர் காணிகள் சிங்களவர்களால் அபகரிப்பு

### - இரா.சம்பந்தன் பா.உ. கண்டனம்

(திருகோணமலை)

தென்னமரவடி தமிழ்க் கிராமத்தில் அங்கிருந்து இடம்பெயர்ந்த தமிழ்க்குடும்பங்களுக்குரிய காணிகளை அபகரிக்கும் முயற்சியில் சில சட்ட விரோத சக்திகள் யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்த பின்னர் ஈடுபட்டிருப்பதாகவும் இச் செயல் சமாதான நடைமுறையில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின் தலைவரும், திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அரசாங்கத்தின் சமாதானச் செயலகத்தின் செயலாளர் நாயகம் டாக்டர் ஜயந்த தனபாலவிற்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சம்பந்தன் அக்கடிதத்தில் தெரிவித்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

ஐ.சீ.ஆர்.வி.என். 297 இலக்கம் கொண்ட காணி அனுமதிப்பத்திரம் மல்லாவிக்கும், மாங்குளத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கீழ்க்காணும் முகவரிக்கு ஒப்படைக்கவும். ஓ.சத்தியமூர்த்தி, துணுக்காய் சாலை, மாங்குளம். தகவல்: நா.சண்முகம். (சி-4919)


## சிரமதானப்பணி

திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வட்டக்கச்சி பொது வைத்திய சாலை வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை கிளி/கிழக்கு புனர்வாழ்வு நிறுவனப் பணிப்பாளர்கள், வட்டக்கச்சிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்கள் இணைந்து சிரமதானப் பணியை மேற்கொண்டனர். காலை 8.00 மணி தொடக்கம் 2.00 மணிவரை சிரமதானப் பணி நடைபெற்றது. (12)

# விளையாட்டுப்போட்டி, கலைநிகழ்வுகளுடன் சிறப்புற நடைபெற்ற இனிய வாழ்வில்ல விழா

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆதரவுடன் இயங்கிவரும் இனியவாழ்வில்லத்தின் 7ஆம் ஆண்டு நிறைவு நாள் நேற்று வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.



வன்னிப் பெருநிலப்பரப்பில் விழிப்புலன் மற்றும் செவிப்புலனற்ற சிறுவர்களைப் பராமரிப்பதற்கென இயங்கிவரும் ஒரேயொரு இல்லமான இனியவாழ்வில்லத்தில் கல்விகற்கும் மாணவர்களிற்கான இல்ல விளையாட்டுப் போட்டிகளும் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வு களில் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் வெகு உற்சாகத்துடனும், களிப்புடனும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தரம் 01 தொடக்கம் தரம் 12 வரையான மாணவர் களை உள்ளடக்கியதாக இயங்கி வரும் இவ் இல்லமானது கல்விக் கூடமாகவே இயங்கிவருகின்றதென்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி இல்லத்தில் நேற்று நடைபெற்ற 7ஆம் ஆண்டு நிறைவு விழாவையும் இல்லமெய்வல்லுனா போட்டியினையும் ஆரம்பிக்கும் முகமாகப் பொதுச் சுடரினை வன்னிமாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் அவர்கள் ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் அவர்கள் ஏற்றி வைத்தார். தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியும், இனிய வாழ்வில்லத்தின் கொடியும் அந்தந்த நிறுவனத்தின் பிரதிநிதிகளால் ஏற்றிவைக்கப்பட மாணவர்களின் அணிவகுப்பு ஆரம்பமானது. அடுத்து மாணவர்களின் சத்தியப்பிரமாணத்தோடு ஆரம்பமான விளையாட்டுக்கள் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் கயிறிழுத்தல், முட்டியுடைத்தல் போன்ற சிறப்பு விளையாட்டுக்களும் விழிப்புலனற்ற மாணவர்களால் நிகழ்த்தப்பட்டன. தொடர்ந்து நிகழ்வினையொட்டிய கலைநிகழ்வுகள் அரங்கில் ஆரம்பமானது. இவ் இல்லத்தின் போசகர் வள்ளியம்மை அவர்களின் தலைமையில் நடைபெற்ற அரங்க நிகழ்வில் சிறப்புரைகளைத் தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களும், வன்னிமாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் அவர்களும் நிகழ்த்தினர். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்று நிகழ்வின் இறுதியில் விளையாட்டுக்களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள், தமிழீழ காவல்துறையினர், தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள், அங்கு கற்கும் மாணவர்களின் பெற்றோர், உறவினர்கள் ஏனைய பாடசாலை மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள், நலன் விரும்பிகள் எனப் பெருந்தொகையானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ச,தீ)

# மன்னார் றோ.க.பாடசாலையில் க.பொ.த. (உ.த) கலை வகுப்பு

மன்னாரில் றோ.க பாடசாலையில் நேற்று முதன் முதலாக க.பொ.த உயர்தர கலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதனை மன்னார் ஆஜர் இராஜப்பு ஜோசப் ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ம.ஆபேல் நெவ்வல், அரசியல் துறைப் பொறுப்பாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். இந்த வகுப்பில் 12 மாணவ, மாணவிகள் நேற்றுச் சேர்க்கப்பட்டு தமது கல்வியை ஆரம்பித்தனர். (மி)

# இலவச கணினி நிலையம் மன்னாரில் திறந்துவைப்பு

(மன்னார்)

லண்டன் சிறிகனக துர்க்கையம்மன் இலவச கணினி நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப் பட்டது. காலை 11 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விசுவலிங்கம் கணினி நிலையத்தைத் திறந்து வைத்தார்.

சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்திற்கு முன்னாலுள்ள கட்டடத்தில் இக்கணினி நிலையம் அமைந்துள்ளது. (மி)

## சாவு அறிவித்தல்

### இராசையா தியாகலிங்கம்
### (கிராமசேவகர்)

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், உருத்திரபுரம் இல99, குடிமத்தியில் வசித்துவருமான இராசையா தியாகலிங்கம் கிராமசேவையாளர் அவர்கள் 28.09.2004 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பூத உடல் உருத்திரபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: மைத்துனர்
ஐ.உருத்திரன்
இல:170, உருத்திரபுரம்.

(4920)

## பொதுக்கூட்டம்

முல்லை வலயப் பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள புதுமுக மாணவர் ஒன்றியத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனைத்துப் புகுமுக மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர் பல்கலைக்கழக புகுமுக மாணவ ஒன்றியத்தினர். (08)




# ஆசிய பயங்கரவாத அமைப்புக்களை ஒடுக்குவதில் உத்திகளை வகுப்பதில் அமெரிக்காவிற்கு தர்ம சங்கடம்

(வோஷிங்டன்)

**சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான போரை அமெரிக்கா நடத்தி வருகிறது. ஆனால் ஆசியாவிலுள்ள சில பயங்கரவாத அமைப்புகளை ஒடுக்குவது தொடர்பான உத்திகளை வகுப்பதில் அமெரிக்காவுக்கு தர்ம சங்கடம் ஏற்பட்டுள்ளது.**

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறையைச் சேர்ந்த பயங்கரவாத எதிர்ப்புக் குழுவின் துணைத்தலைவரான வில்லியம் போப் கூறியதாவது, ஆசிய நாடுகளைச் சேர்ந்த 10 அமைப்புகளை பயங்கரவாத அமைப்புகள் என்று அமெரிக்கா முத்திரை குத்தியுள்ளது. உலக நாடுகளில் இருந்து அந்த அமைப்புகள் நிதி திரட்ட முடியாத வகையில் தடைகளை ஏற்படுத்தி அவற்றின் செயற்பாடுகளை அமெரிக்கா முடக்கியுள்ளது. ஆனாலும் ஆசிய நாடுகளிலுள்ள பயங்கரவாத அமைப்புகளில் பல வட்டார அளவில் செயற்படுபவை. சில அமைப்புகள் தனிநாடு கோரிப் போராடி வருகின்றன. மக்களின் உணர்வுகளோடு சம்பந்தமுடைய பிரச்சினைகளாக அவை இருப்பதால் அந்தப் பயங்கரவாத அமைப்புக் கள் மீது நடவடிக்கை எடுப்பது எதிர்விளைவுகளையும் ஏற்படுத்தி விடக்கூடும். அந்த அமைப்புகள் முன்வைத்துள்ள பிரச்சினைகளுக்கு தேசிய அளவிலோ, வட்டார அளவிலோ தீர்வுகாண முடியும். அவற்றை முளையிலேயே கிள்ளி எறிய வில்லையெனில் சர்வதேச அளவில் பெரும் பிரச்சினையாக உருவெடுக்கக் கூடியவை. எனினும் அத்தகைய அமைப்புகள் மீது மிகக் கடுமையான ஒடுக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டால் அது எதிர்விளைவுகளை ஏற்படுத்தி விடக்கூடும். அதனால் அத்தகைய அமைப்புகளைச் சமாளிப்பது சிக்கலான பிரச்சினையாகும் என்றார் வில்லியம்போப்.



ஈராக்கின் பஸ்ரா நகரில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ள பிரிட்டன் இராணுவத்தை அவதானிக்கும் ஈராக்கியச் சிறுமி.



கடந்த யூலை மாதம் பாகிஸ்தானிய பிரதமர் சௌகத் அஸீசை படுகொலை செய்ய எடுத்த முயற்சியின் சூத்திரதாரியான அல்கைறதா அமைப்பின் முக்கிய உறுப்பினர் அம்ஜாட் பாருகி இவர் பாகிஸ்தானிய படையினரின் தாக்குதலில் ஞாயிறன்று பலியானார்.

## சீக்கியரின் கோவில், பாடசாலை மீது லாகூரில் கும்பல் ஒன்று தாக்குதல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் லாகூரில் உள்ள சீக்கியரின் கோவிலை ஒரு கும்பல் தாக்கியது. அதே வளாகத்தில் உள்ள கல்லூரியும் நேற்று முன்தினம் தாக்கப்பட்டது.

பாகிஸ்தானில் உள்ள மேற்கு பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியர்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்காக லாகூரில் ஒரு சீக்கியர் கோவில் உள்ளது. அதே வளாகத்தில் ஒரு கல்லூரியும் உள்ளது. சீக்கியர்கள் கட்டிய இந்தக் கல்லூரியை பஞ்சாப் அரசு எடுத்துக்கொண்டது. 'இந்தக் கல்லூரி, கட்டடத்தை சீக்கியர்கோவில் அறக்கட்டளைக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். சீக்கிய யாத்திரிகர்களைத் தங்க வைப்பதற்காக இடவசதி தேவைப்படுகிறது. அதனால் கல்லூரியை வேறு ஒரு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்று சீக்கியர்கள் குழு பாகிஸ்தான் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. ஆனால் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒரு கும்பல் ஆத்திரத்துடன் கல்லூரிக் கட்டடத்தை தாக்கியது. பின்னர் சீக்கியர் கோவிலுக்குள் புகுந்து அங்குள்ள பொருட்களை உடைதது எறிந்தனர். சிலர் கல்வீசித் தாக்கினர். பொலிசார் அந்த இடத்துக்கு விரைந்து சென்று கலவரக் கும்பலை அடித்து விரட்டினர்.



பாக்தாத், சதார் நகரில் அமெரிக்க முகாமருகில் தேடுதல் சம்பவம் ஒன்றின் போது படையினரால் நடத்தப்பட்ட தாக்குதலில் எரியும் வாகனத்தை அணைக்க முயலும் தீயணைப்புப் படையினர்.

## விமானத் தாக்குதலில் பாக்தாத்தில் 4 பேர் பலி

(பாக்தாக்)

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் ஷியா முஸ்லிம்களின் மதகுரு மொக்தாதா சதர் ஆதரவாளர்கள் நிறைந்த பகுதியில் நேற்று அமெரிக்க இராணுவ விமானங்கள் குண்டுவீசித் தாக்கின. இதில் 4 பேர் கொல்லப்பட்டனர். விமானத்தாக்குதலுக்குப் பிறகு குண்டு வெடிக்கும் சத்தங்கள் கேட்டன. இதில் ஒரு வாகனம் சேதம் அடைந்தது. இரவில் 3 முதல் 4 மணி நேரம் வரை விமானங்கள் குண்டு வீசின. விமானத்தாக்குதல் நிறுத்தப்பட்டதும் ஈராக்கிய அமைப்புக்கள் குண்டுகளை வெடிக்கச் செய்துள்ளன.

## பலஸ்தீனருக்கெதிரான இராணுவ உத்தியை சாடுகின்றனர் இஸ்ரேலின் படை அதிகாரிகள்

(டெல்அவிவ்)

பலஸ்தீனர்களுக் கெதிராக மேற்கொள்ளப்படும் கடுமையான இராணுவ உத்திகளை இஸ்ரேலிய படை உயர் அதிகாரிகள் கண்டித்துள்ளனர்.

இஸ்ரேலின் விமானப்படை தலைமை அதிகாரிகளுக்கு இந்தப்படை அதிகாரிகள் நால்வர் ஆட்சேபணக் கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளனர்.

பலஸ்தீன மக்கள் திட்டமிடப்பட்ட முறையில் துன்புறுத்தப்படுவதை இந்த அதிகாரிகள் கண்டித்துள்ளனர்.

மேற்குக் கரையில் தமது அணியின் நடவடிக்கைகள் மற்றும் தேடுதல்களின் போது பலஸ்தீன மக்களின் வீடுகள் அழிக்கப்படுவதற்கும் அவர்கள் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இதே படைப் பிரிவைச் சேர்ந்த இராணுவ றிசேவ் படையினர் பலர் கடந்த டிசம்பர் மாதத்தில் மேற்குகரையிலும், காசாவிலும் தாம் பணிபுரிய விரும்பவில்லை எனத் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் சில இஸ்ரேலிய விமானமோட்டிகளும், பொது மக்களும் பாதிக்கப்படுவதால் தங்களால் இத் தாக்குதல்கள் மேற்கொள்ள முடியாது எனத் தெரிவித்திருந்தனர்.

## தாய்லாந்தில் மீண்டும் பறவைக் காய்ச்சல்

(பாங்கொக்)

தாய்லாந்தில் பறவைக் காய்ச்சல் நோயால் ஒரு பெண் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. நோய்த்தடுப்புத்துறை அதிகாரிகள் இந்தத் தகவலைத் தெரிவித்தனர். தாய்லாந்தில் கடந்த ஆண்டு இதேநோய் தாக்கி மொத்தம் எட்டுப்பேர் இறந்தனர். கடந்த யூலையில் மீண்டும் இதே நோய் தாக்கியது. கடந்த மாதம் 18வயது இளைஞர் உட்பட 9பேர் இறந்தனர்.

## சீனாவின் 20ஆவது செயற்கைக்கோள்

(பீஜிங்)

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சிப் பணி களுக்கான 20ஆவது செயற் கைக் கோளை சீனா கடந்த திங்கட்கிழமை விண்ணில் செலுத்தியது. இது பூமிக்குத் திரும்பவும் கொண்டுவரக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட செயற்கைக்கோளாகும். ஏற்க னவே சீனா அனுப்பிய 19 ஆவது செயற்கைக்கோள் இரண்டு நாட்களுக்கு முன் பூமிக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் 20ஆவது செயற்கைக்கோள் அனுப்பப்பட்டுள்ளது. வடமேற்குச் சீனாவில் கான்சூர் மாகாணத்தில் உள்ள ஜியுகுவான் செயற்கைக்கோள் ஏவுமையத்தில் இருந்து இந்தச் செயற்கைக்கோள் செலுத்தப்பட்டது.

## தவறான புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் ஈராக் மீதான போர் ஆரம்பிக்கப்பட்டு விட்டது

### —ஒப்புக் கொள்கிறார் பிரிட்டிஸ் பிரதமர் ரொனிபிளேயர்

(லண்டன்)

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவல்கள் தவறாகி விட்டது. ஆனால் அந்த நாட்டில் இருந்து தற்போது படைகளை விலக்கிக் கொள்வது பயங்கரவாதிகளிடம் சரண் அடைவது போலாகிவிடும் என்று பிரிட்டிஸ் பிரதமர் ரொனிபிளேர் கூறியுள்ளார்.பி.பி.சி நிறுவனத்துக்கு அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டியில் புலனாய்வுத் துறையினர் அளித்த சில தகவல் களைக் கொண்டு ஈராக்போரை நியாயப் படுத்தினோம். அந்தத் தகவல்கள் தவறானதாகிவிட்டது. ஆனால் ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் ஆட்சியைக் கவிழ்த்தது சரிதான். கூட்டணிப்படைகளை இப்போது வாபஸ் பெற்றால் பயங்கரவாதிகளிடம் சரண் அடைந்தது போலாகிவிடும். போருக்குப்பிறகு ஈராக்கில் என்ன செய்யவேண்டும் என்பது குறித்து திட்டமிடுவதில் தவறேதும் ஏற்படவில்லை. ஆனால் வெளிநாட்டில் இருந்து பெரும் எண்ணிக்கையில் பயங்கரவாதிகள் ஈராக் வந்திருப்பது எதிர்பாராதது என்றார்.

# “கடந்த காலங்களில் நாம் விட்ட தவறுகளை ஏற்று மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்”

## அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் வண.நோபேர்ட் அந்திராடி

(திருமலை)

**“கடந்த காலங்களில் நாம்விட்ட தவறுகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். மற்றவர்களின் கருத்துக்களுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். மற்றவர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள நாம் முன்வர வேண்டும்”இவ்வாறு அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய டாக்டர் நோபேர்ட் அந்திராடி தெரிவித்தார்.**

137 வருடபழமை வாய்ந்த திருகோணமலை சென்ஜோசப் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றிப் பேசும்போது இவர் இதனைக் கூறினார்.

சனிக்கிழமை காலை கல்லூரி கேட்போர் கூடத்தில்விழா நடைபெற்றது.ஆரம்பத்தில் பிரதம விருந்தினர் விழாவின் தலைவரான திருகோணமலை- மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதி மேதகு டாக்டர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை கௌரவவிருந்தினரான. மாகாணக் கல்வியமைச்சின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கிஸ்ணகுமார், சிறப்பு விருந்தினரான ரோட்டரிக்கழக முன்னைநாள் தலைவர் ஆர்.ராஜாராம்மோஹன் ஆகியோர் கல்லூரி அதிபர் வணபிதா ஜீவனதாஸ் பெர்னாண்டோ அடிகளார் தலைமையில் கல்லூரி பாண்ட் இசையுடன் வரவேற்கப்பட்டனர்.

விழாத்தலைமையுரையை அதி மேதகு கிங்ஸிலி சுவாம்பிள்ளை மூன்று மொழிகளிலும் நிகழ்த்தினார்.

பிரதம விருந்தினரான அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் மேலும் பேசும்போது, “நாட்டில் யுத்தம்காரணமாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் குழந்தைகள்.குழந்தைகள் இல்லாத நாட்டிற்கு எதிர்காலமே கிடையாது. எம்மைச்சுற்றிச் சுவரைக் கட்டியெழுப்பக்கூடாது. எல்லாவேறுபாடுகளுக்கும் மேலாக நாம் மனிதர் என்று உயர்ந்து நிற்க வேண்டும். மனிதனால் எம்மைச் சுற்றி அமைக்கப்பட்ட தடைகள் எல்லாவற்றிற்கும் மேலாகக் கருத்துடன்பாட்டைக் கட்டியெழுப்பி சுபீட்சவாழ்வுக்கு வழிகோல வேண்டும். வடக்குக்கும் தெற்குக்கும் இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அதை வெளிப்படுத்துமுகமாகவும், வலியுறுத்து முகமாகவும், நல்லெண்ணத்தைக் காட்டும் முகமாகவும் நாம் திருகோணமலைக்கு வந்துள்ளோம். திருமலையில் வாழும் மக்களின் மொழி,பண்பாடு,பாரம்பரியத்தை நாம் மதிக்கின்றோம், போற்றுகின்றோம்.சமாதானத்தை அடைவதில் திருமலை மக்கள் காட்டும் உறுதிப்பாட்டைக் கண்டு மகிழ்கின்றோம்” என்று தெரிவித்தார் அதிதிகள் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.திருமலை சென்ஜோசப் கல்லூரிக்கென இணையத்தளம் ஒன்றையும், அனுராதபுரம் மறைமாவட்டஆயர் ஆரம்பித்து வைத்தார். கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. (25)



வட்டக்கச்சி பொதுச்சந்தைக்கண்மையாக பிரதான வீதியில் நீண்ட காலமாகத் திருத்தப்படாதுள்ள மேலதிக நீர் வெளியேறும் பகுதியை (கோஸ்வே) படத்தில் காண்க. இந்த வீதியும் தற்போது குன்றும் குழியுமாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மாரிகாலம் ஆரம்பமாகவுள்ள நிலையில் போக்குவரத்துத் தடைப்படும் சூழ் நிலையுள்ளதால் இவற்றை திருத்தியமைக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வரவேண்டியது மிகவும் அவசியமானதாகும். (படம்:- ரூபன்)

# ‘பச்சை வயல் கனவு’ நாவல் கிளிநொச்சியில் வெளியீட்டு விழா

(அலுவலக செய்தியாளர்)

எழுத்தாளர் தாமரைச் செல்வியின், ‘பச்சை வயல் கனவு’ நாவல் வெளியீட்டு விழா ஒக்டோபர் 3ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

முப்பது வருடங்களாகத் தொடர்ந்து எழுதிவரும் தாமரைச் செல்வியின் ‘பச்சை வயல் கனவு’, நாவலில் கிளிநொச்சியின் அறுபது ஆண்டுகால வரலாறு பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

# முல்லையில் நிகொட் திட்டத்தினூடாக 59 வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

## -திட்டப்பணிப்பாளர் தகவல்

(முள்ளியவளை)

நிகொட் திட்டத்தின் ஊடாக முல்லைமாவட்டத்தில் 59 வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என முல்லைத் தீவு மாவட்ட நிகொட் திட்டப் பணிப்பாளர் சி.இரகுநாதபிள்ளை தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், “இம் மாவட்டத்திலே நிகொட் திட்டத்தின் கீழ் கல்விக்காக 29 திட்டங்களும், சுகாதாரத்திற்காக 8 திட்டங்களும், கால்நடை அபிவிருத்திக்காக 2 திட்டங்களும், நீர் தண்ணீர் பிரிவளத்திற்காக 1 திட்டமும், பாதை பாலம் போடுதலுக்காக, 01 திட்டமும், மீன் பிடிக்காக 01 திட்டமும், நீர்ப்பாசனத்துக்காக 05 திட்டங்களும், வீட்டுத் திட்டமாக 06 திட்டங்களும் என அமுல் படுத்தி வருகின்றோம்.

இவைகளை 260 மில்லியன் ரூபாவில் செயற்படுத்தி வருகின்றோம். இதில்கிட்டத்தட்ட பல திட்டங்கள் முடிவடைந்துள்ளன. ஏனைய திட்டங்கள் மெதுவாக நகர்ந்தாலும் நடைபெற்று வருகின்றன. அதில் முக்கியமான திட்டங்களாக மதவாளசிங்கன்குளம், உடையார்கட்டுக் குளம் இரண்டும் இப்போது புனரமைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் விவசாயிகள் பாரிய நன்மையடையவுள்ளனர்.

அதேபோன்று கணுக்கேணிக் குளப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கணுக்கேணிக் குளம்புனரமைப்பிற்கான முயற்சி நடைபெற்று வருகின்றது. 39 மில்லியன் ரூபா அளவில் அக் குளத்திற்குச் செலவு செய்ய இருக்கிறோம். அதுவும் கைகூடும் என நினைக்கிறோம் எனத் தெரிவித்தார். (ஆ)

# நெற்செய்கை தொடர்பாக உடையார்கட்டில் ஒன்றுகூடல்

(உடையார்கட்டு)

முல்லை மாவட்ட புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் உடையார்கட்டுப்பகுதிக் காலபோக நெற்செய்கையை மேற்கொள்வோர்களுக்கான ஒன்றுகூடல் கடந்த வியாழக்கிழமை 3.00 மணிக்கு உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் முல்லை.மாவட்ட அரச அதிபர் தலைமையில் ஆரம்பமானது.

இந்த ஒன்றுகூடலில் கால்நடை கட்டுப்படுத்தல், நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான கால எல்லையைத் தீர்மானித்தல் போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டன. முல்லை.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் தயானந்தா, முல்லை, மாவட்டபிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் சிவகுமார், முத்தையன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் சண்முகராஜா, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள் பொது அமைப்புப் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பல தரப்பினர் கலந்துகொண்டனர். (19)



மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசியக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவுக்கு பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டோர். பாண்ட் வாத்திய இசைமுழங்க அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்:- மிரான்டா)

## - இடம்பெயர்ந்தோர் முகாம்களிலுள்ள -

# அடையாள அட்டை இல்லாதோரின் விபரங்கள் சேகரிக்கப் பணிப்பு

..ட்கிழக்கில் இடம் பெயர்ந்தோ... முகாம்களில் வாழும் அடையாள அட்டைகள் இல்லாதவர்கள் சம்பந்தமாக பரிசீலனை செய்யுமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த சில்வா சகல அரசாங்க அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார். அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழும் அதிகமான மக்களுக்கு அடையாள அட்டை இல்லை எனத் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளதுடன், தேர்தல் காலங்களில் அடையாள அட்டை அத்தியாவசியமெனப் பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டு ஒரு வருடத்தின்பின் அது நடைமுறைப்படுத்தப்படுமானால் அகதி முகாம்களில் அடையாள அட்டை இல்லாமல் இருப்போர்களின் முழு விபரங்களையும் சேகரித்து வைக்குமாறு அரச அதிபர்களுக்குத் அறிவித்துள்ளார்.

## பன்னவேலைப் பயிற்சி வகுப்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு வேணாவில் தாய்சேய் போசாக்கு நிலையத்தில் மகளிருக்கான பன்ன வேலைப்பயிற்சி வகுப்பு முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் மாவட்ட பனைஅபிவிருத்திச் சபையினரால் கடந்த 20ஆம் திகதி மதியம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.இந்த நிகழ்வில் நிலைய நிர்வாகத்துடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட துணைப்பொறுப்பாளர், மாவட்டசெயலர், பனை அபிவிருத்திச் சபையின் மாவட்ட இணைப்பாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (08)

## தையல் இயந்திரம் வழங்கல்

(வட்டக்கச்சி)

I.O.M நிறுவனம் வட்டக்கச்சியில் இருவருக்குத் தையல் இயந்திரங்கள் இரண்டினை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்வியலை மீளக் கட்டியெழுப்பும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் எஸ். நாகேஸ்வரி, கலைமகள் ஆகிய இருவருக்கு இவ் வியந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. (12)

## குப்பை கூழங்களை அகற்றல் மன்னார் நகரத்தில் தேக்கம்

(மன்னார்)

மன்னார் நகரத்தில்குப்பை கூழங்களை அகற்றும் பணிகள் மிகவும்மந்தகதியிலே உள்ளன. மன்னார்ப் பிரதேச சபைக்குப் போதிய வாகனவசதி இல்லாமையே இந்நிலைமைக்குக் காரணமாகும். குப்பை சேகரித்து ஏற்றிச்செல்லும் உழவு இயந்திரங்களில் அடிக்கடி பழுது ஏற்படுவதாலும், அதனைத்திருத்தம் செய்யப் போதிய வசதியின்மையாலும் வர்த்தக நிலையங்கள், வணக்கத்தலங்கள் போன்ற முக்கியமான இடங்களில் குப்பைகள் தேங்கிக் கிடக்கின்றன. (மி)

# ரணில் விக்கிரமசிங்க பங்கேற்காவிட்டாலும் தே.சமாதான ஆலோசனைக்குழு கூடும்

-சிறிலங்கா அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

**எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்றாலோ, பங் கேற்காவிட்டாலோ திட்டமிட்டவாறு தேசிய சமாதான ஆலோசனைக் குழுவைக் கூட்டுவது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்தக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.**

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சனாதிபதி சந்திரிகா அனைத்துக் கட்சிகளுக்கும், மதப் பிரமுகர்களுக்கும் கடிதம் அனுப்பிவைத்துள்ளார். விடுதலைப்புலிகள் கூறுவதைப் போன்று இடைக்கால தன்னாட்சி நிர்வாகசபை யோசனைகளின் அடிப்படையிலேயே பேச்சுக்கள் ஆரம்பமாக வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்துகின்றார். ஆனால் இந்தக் கருத்துக்களை சமாதானத்தை விரும்பும் அனைவரும் கண்டிப்பார்களென அரசாங்கத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

சனநாயக வழிமுறைகளுக்கமைய நிரந்தர சமாதானத்தை நோக்கி நாட்டைச் செலுத்த வேண்டுமென்பது கூட்டமைப்பு அரசாங்கத்தின் தேர்தல் கால உறுதிமொழி என அவர் கூறினார். அரசியல் மற்றும் சமய. சிவில் சமூகம் ஆகிய நிலையான கமிட்டிகளை இது உள்ளடக்கியிருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் ஆலோசனைச் சபையில் பங்கேற்கும் சகல தரப்பினரும் முன்வைக்கும் கருத்துக்கள் புலிகளுக்கு தெரிவிக்கப்படுமென கூறப்பட்டுள்ளது.

## அம்பாறை மீனவர்கள் யாழ்.சுற்றுலா!

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிதியுதவியுடன் பங்காளி நிறுவனமான சேவாலங்கா, கடல் தொழில் நீரியல்வளத் திணைககளம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் போன்றவற்றின் வழிகாட்டலுடன் கல்முனை, அக்கரைப்பற்று கிராமங்களைச் சேர்ந்த இரண்டு மீனவ கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் 30 பேர் யாழ்ப்பாணத்தில் மீனவர் மத்தியில் நல்லுறவை ஏற்படுத்தவும் மீன்பிடி சம்பந்தமான அறிவினை பெற்றுக்கொள்ளும் பொருட்டும் மீனவ சுற்றுலா ஒன்றை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் மீனவ சங்கம், மீனவ கூட்டுறவுச் சங்கம் என்பனவற்றுக்குச் சென்று அங்குள்ள முக்கியஸ்தர்கள் பலரையும சந்திக்கவுள்ளனர்.

# தேசிய சமாதான ஆலோசனைச் சபையில் எதிர்க்கட்சிகள் அங்கம் வகிக்க மாட்டாது

உத்தேச சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக சனாதிபதியினால் ஆரம்பிக்கப்படவிருக்கும் தேசிய சமாதான ஆலோசனைச் சபையில் எதிர்க்கட்சிகள் எதுவும் அங்கம் வகிக்க மாட்டாது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த ஆலோசனைச் சபைக் கூட்டத்திற்கான அழைப்பைப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே நிராகரித்து விட்டது. தமிழரசுக் கட்சி பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா சமாதான செயலகத்திற்கு அனுப்பிவைத்துள்ள பதிலில், தமது கட்சி குறிப்பிட்ட கூட்டத்திலோ, சபையிலோ அங்கம வகிக்க மாட்டாது என நேற்று முன்தினம் மாலை தெரிவித்துள்ளார். மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளும் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ள போதிலும், மற்றுமொரு கட்சியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எந்தத் தீர்மானத்தையும் இதுவரை எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊர்காவல் படையினரை விடுவிக்கா விடின் திருமலை சிவில் நிர்வாகத்தை நிறுத்துவோம்

**வடக்கு கிழக்கு சிங்கள அமைப்பு எச்சரிக்கை**

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ள இரண்டு ஊர்காவல் படையினரை விடுதலைப்புலிகள் விடுவிக்காவிட்டால் திருகோணமலை அரச சிவில் நிர்வாகத்தை ஒரு கிழமை நிறுத்தி விடுவோம் எனவும், திருகோணமலையில் இருந்து ஏற்றுமதியாகும் கோதுமை மா மற்றும் எரிபொருட்கள் யாவும் நிறுத்தப்படும் எனவும் வடகிழக்கு சிங்கள அமைப்பு அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. ஜே.வி.பியினரும், ஜாதிக ஹெல உறுமய கட்சியும் இவர்களின் விடுதலை சம்பந்தமாக எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை எனச் சிங்கள அமைப்பு தெரிவித்துள்ளது. இரு ஊர்காவல் படையினரையும் விடுவிக்கச் சிறிலங்கா அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

# இலங்கை-இந்திய ஒப்பந்தம் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம்

–மு. காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

இலங்கை-இந்திய ஒப்பந்தம் இந்தநாட்டு முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட பாரிய துரோகச் செயலாகும். வடக்கையும், கிழக்கையும் நிரந்தரமாக இணைக்கும் முடிவினால் வடக்கு கிழக்குப் பிராந்தியத்தில் முஸ்லிம்களின் அரசியல் பலவீனப்பட்டது என முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து இலங்கை வந்த இந்திய பொருளாதாரப் பேரவையின் பிரதிநிதிகளுக்கு அளித்த விருந்துபசாரத்தில் கருத்து வெளியிட்ட அவர் கடந்தகாலப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தியா தன்னுடைய கொள்கைகளில் பல புதிய பரிமாணங்களைத் தற்சமயம் சரியாக அடையாளம் கண்டிருப்பதாகத் தெரிவித்தார். அந்த வகையில் இந்தியப் பாராளுமன்றில் சனாதிபதி அப்துல்கலாம் புதிய அரசின் கொள்கை விளக்க உரையில் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இந்திய நிலைப்பாடுகள் குறித்த சில விடயங்களை குறிப்பிட்டிருந்தமையை அவர் சுட்டிக் காட்டினார். மொழிவாரியாக ஒரு மாநிலத்திற்கு மட்டும் ஆட்சியைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் அமைந்த இந்திய அரசின் கொள்கைகள் இன்று மொழிரீதியான, மாநிலத்திற்குள்ளே சமயரீதியாக அடையாளம் உள்ள சமூகத்தினருக்கும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற உண்மையை ஏற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

-இ.நி.யோசனை அடிப்படையில்-

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்காவிடின் நாடு இரண்டாகப் பிரிவதைத் தடுக்க முடியாது

-முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சி செய்யாது விட்டால் நாடு இரண்டாகப் பிரிவதைத் தடுக்க முடியாதென பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் இணைந்து இவ் விடயம் குறித்துத் தீர்மானம் எடுப்பதற்கான காலம் வந்துள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமூகத்தின் அனைத்துத்தரப்பினரும் இணைந்து இவ்விடயம் குறித்து தீர்மானம் எடுப்பதற்கான காலம் வந்துள்ளதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார். 1977ஆம் ஆண்டு அபிவிருத்திச் சபை யோசனைகளை நடைமுறைப் படுத்தியிருந்தால் இன்றைய பிரச்சினைகள் உக்கிரமடைந்திருக்காதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

–கட்டண அதிகரிப்பையடுத்து–

# சிற்றூர்தி சேவையினரின் போராட்டம் கைவிடப்பட்டது

தனியார் சிறறூர்திகள் இன்று முதல் நடத்தவிருந்த சேவைப் புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளது. தனியார் சிற்றூர்திகளின் கட்டணங்கள் எதிர்வரும் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்படவுள்ளதாக முடிவெடுக்கப்பட்டதையடுத்து சேவைப் புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் 3ரூபா 50 சதமாக இருந்த ஆகக்குறைந்த கட்டணம் 4 ரூபாவாக அதிகரிக்கிறது. 6 ரூபா முதல் 27 ரூபா வரையிலுமான கட்டணங்கள் ஒரு ரூபாவாலும்,28 ரூபாவிலிருந்து 47 ரூபா வரையிலுமான கட்டணங்கள் 2 ரூபாவாலும்,66 ரூபா வரையிலுமான கட்டணங்கள் 3 ரூபாவாலும், அதற்கு மேலதிகமான கட்டணங்கள் 7 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளன. இதற்கான தீர்மானம் நேற்று போக்குவரத்துத் துறை அமைச்சர் பிலீக்ஸ பெரேராவுக்கும் தனியார் சிற்றூர்திச் சங்கத்தினருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்டது. இதற்கிடையில் வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் 11 மாவட்டங்களில் மீன்பிடித் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு டீசலை 3 ரூபா மானிய அடிப்படையில் வழங்குவதற்கு கடற்றொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

# பிரதி அமைச்சரின் மகனது திருமண நிகழ்வில் வெடிகுண்டுப் புரளி, பிரமுகர்கள் வெளியேற்றம்

(கொழும்பு)

வெடிகுண்டு அச்சத்தால் சிறிலங்காவின் உயர் தலைமை அமைச்சர்கள் பயந்தோடிய சம்பவம் ஒன்று கொழும்பில் இடம் பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பிரதி அமைச்சர் ஒருவரின் மகனின் திருமணம் அண்மையில் கொழும்பில் ஐந்து நட்சத்திர விடுதியொன்றில் நடைபெற்றது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஆளும் கட்சி எதிர்க்கட்சி, அரசியல்வாதிகள் பிரதியமைச்சரின் அழைப்பிற்கிணங்க அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

இந்த வேளையில் குறித்த விடுதியில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாக அநாமதேய எச்சரிக்கையொன்று கிடைக்கப் பெற்றது.

பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் அங்கிருந்து சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறி விட்டனர். ஏனைய அரசியல்வாதிகள் சிலரும் நழுவி விட, வெளியில் இருந்து முக்கிய பிரமுகர்கள் எவரும் விடுதிக்குள் நுழையாது பாதுகாப்பு ஊழியர்களால் தடுக்கப்பட்டனர். முக்கிய அரசியல் தலைவர்கள் இப்படி ‘அலறியடித்துக் கொண்டு’ ஓடிய போதிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உட்பட பல பிரமுகர்கள் தொடர்ந்தும் அத் திருமண நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெற்றோலியக் கூட்டுத்தாபன நிதியில் பிரதிஅமைச்சரின் வீட்டுக்குத் தளபாடம்

(கொழும்பு)

இலங்கையில் பிரதி அமைச்சர் (மஹிந்தாநந்த அலுத்கமகே) ஒருவருக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியில் இருந்து வீட்டுக்குத் தேவையான தளபாடப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகத் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து அரச உயர் மட்டத்திலும் பேச்சுக்கள் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஐக்கியதேசியக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் ஊழல்கள் இடம்பெற்றதாகத் தற்போதைய அரசாங்கம் குற்றம் சுமத்திவருகின்ற நிலையில் இந்தக் குற்றச்சாட்டு அரசாங்கத்திற்குச் சங்கட நிலையை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பிட்ட பிரதியமைச்சரின் வீட்டுக்கு சுமார் 1 இலட்சத்து 70 ஆயிரம் பெறுமதியான தளபாடப்பொருட்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபன நிதியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சோதனைச் சாவடிகளில் உசாராக நில்லுங்கள்! கிழக்குப் பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பணிப்புரை

சோதனைச் சாவடிகளில் பொலிசாரை உசார் நிலையில் இருக்குமாறு கிழக்குப் பிராந்தியப் பிரதி பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் முற்பகல் பொலிஸ் அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்ட சந்திப்பின் போதே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இவர் தொடர்ந்து உரையாற்றுகையில், சோதனைச் சாவடிகளில் பொலிசார் கடமைகளில் ஈடுபடும் போது எப்போதும் உசார் நிலையில் இருக்க வேண்டும எனவும், பொலிசார் தாம் கடமைகளில் ஈடுபடும் போது மக்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் நடந்து கொள்ள வேண்டும் எனவும், குறிப்பிட்டார். இச்சந்திப்பின் போது மட்டக்களப்பு மாவட்ட வீதிகள் தோறும் பொலிசார் என்றுமில்லாத வகையில் நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆதவனின் அனுபவப் பகிர்வுகள்

**அன்புவாசகர்களே...!**

கிரேக்க நாட்டில் PIZZA LAVODIA எனும் இடத்தில் MARIYA எனும் கிரேக்கப் பெண்ணின் தாத்தாவின் சுற்றுலா விடுதியில் நிற்கிறேன். முன்னாலே நீலக்கடல். மிகவும் குளிரான நாட்டிலிருந்து இங்கு வந்த எனக்கு இந்தக் கால நிலை ரொம்பப்பிடித்துப் போயிற்று.

கடல் என்றால் எனக்குக் கொள்ளைப் பிரியம். விரிந்து விரிந்து... ஆழமாய்... ஆழமாய் சென்றுகொண்டே இருக்கும்.

நல்ல மணற்கடலில் நிமிர்ந்த படியே, புறநீச்சல் அடித்தபடியே, மேலே நீலவானத்தையும் பிரபஞ்ச விரிவையும் இரசித்தபடியே கீழே யுள்ள ஆழமும், இரகசியமும் உணராதபடி மணிக்கணக்காக கடற்பரப்பில் படுத்திருப்பது என்பது எனக்கு மிகவும் பிடித்த விடயங்களில் ஒன்று. அந்த அனுபவத்தை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது. அனுபவித்தவர்க்கே புரியும்.

"கண்டவர் விண்டிலர்
விண்டவர் கண்டிலர்"
என்பது போல

* * * *

Mariya வின் தாத்தாவும், பாட்டியும் என்னை அன்புடன் உபசரித்தனர். அவர்களிடம் உண்மையான கிரேக்கர்களின் கலாசாரத்தையும் விருந்தோம்பலையும் கண்டேன்.

எனது நாட்டின் சோகவரலாறுகளை Mariya அவர்களுக்கு மொழிபெயர்த்துக் கூறினாள். அவர்களது அன்பு-அவர்கள் தமது வேர்களைப் பாதுகாக்கிற பக்குவம் என்னை நன்றாகக் கவர்ந்தது. அவர்களை விட்டுப்பிரிவது என்பது எனக்குச் சிரமமாகப்பட்டது.

Mariya தனது விலாசத்தையும், தொலைபேசி எண்களையும் தந்தாள். டென்மார்க் வந்தபின்னர் அவளுக்கு ஒரு Card போட்டேன். அவளும் பதிலுக்கு ஒரு கடிதம் போட்டாள். பின்னர் எந்தத் தொடர்பும் இல்லை. அவள் இப்போ எங்கே இருப்பாளோ தெரியவில்லை. மனித வாழ்வு இப்படித்தான் சில நினைவுகள் அப்படியே மங்கலாகி மறைந்துவிடும். Mariyaவும் மறைந்துவிட்டாள். இப்பொழுது நினைக்கையில் அவளது முகம் மங்கலாகத்தான் தெரிகிறது.

நான் NAWSA தீவின் அழகில் லயித்துக்கொண்டிருந்தேன். அந்தத் தீவில் உள்ள 'கடதாசிப் பூ மரங்கள்' (Papper rose or Borgan villa) என்னைப் பெரிதும் கவர்ந்தன. ஒவ்வொரு வீட்டு வாசலிலும் விதவிதமான கடதாசிப் பூ மரங்கள் பூத்துச் சிரித்தன.

ஒரு வீட்டில் மஞ்சள் கடதாசிப் பூக்கள் கொத்துக் கொத்தாகப் பூத்திருந்தன. அதன் கொப்புகளை வளைத்து ஒரு அரைவட்டமாக்கி வாசலில் வரவேற்பது போல் வளர்த்திருந்தார்கள். நான் அத்தகைய மஞ்சள் பூ வரவேற்பு வாசலை உலகெங்கும் காணவில்லை. அதி விசேஷமாக இருந்தது.

எனது Car ஐ அந்த வீட்டு வாசலில் நிறுத்தினேன். மெதுவாக இறங்கி அந்த மஞ்சள் கடதாசிப் பூக்களை நோக்கிச்சென்றேன். கடதாசிப்பூவில் எந்த மணமும் இருக்காது என்று தெரிந்தும் அதில ஒன்றைப்பறித்து முகர்ந்து பார்த்தேன். அப்பொழுது திடீரென்று என் செவிகள் அதிரும்படி பாரிய அதட்டல் ஒலி வீட்டினுள்ளேயிருந்து கேட்டது...

வீட்டினுள்ளிருந்து ஒரு பெரிய மீசை வைத்த அசல் கிரேக்கன் ஒருவர் வெளியே என்னை நெருங்கி வந்தான். நெருங்கி வரவர எனக்குப் பயம் பிடித்துக்கொண்டது. அவன் ஏதோ கிரேக்க பாஷையில் கத்திக்கொண்டே வந்தான். மேலும் பயம் அதிகரித்தது.

"சரி 'பொலிஸ்' இல் கொண்டு போய்க் கொடுக்கப்போகிறான்" என நினைத்தேன். 'Carஐ எடுத்துக் கொண்டு வேகமாக ஓடிவிடலாமா?' என்றும் நினைத்துக்கொண்டேன். அதற்கிடையில் அவன் நெருங்கி வந்துவிட்டான். எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

என்னிடம் வந்த அவன் தாறுமாறாக கிரேக்க மொழியில் பேசினான். அவன் ஏசுகிறானா? அல்லது கேள்விகள் கேட்கிறானா? என்று கூட எனக்குப் புரியவில்லை.

நான் அவனை இடைமறித்து-

"I am sorry, I am a tourist; I dont know Greece (என்னை மன்னிக்கவும், நான் ஒரு சுற்றுலாப் பயணி: எனக்குக் கிரேக்கம் தெரியாது)" என்று சொன்னேன்.

அவன் என்னை மேலும் கீழும் ஏறிட்டுப் பார்த்தான். பார்த்துவிட்டு வீட்டினுள்ளே யாருக்கோ குரல் கொடுத்தான்.

'ஒரு பெரிய நாயைக் கூப்பிடுகிறானோ' என நினைத்தேன்.

உள்ளேயிருந்து மஞ்சள் TShirtடும் வெள்ளைக்குட்டைப் பாவாடையும் அணிந்த ஒரு 11 வயதுச் சிறுமி ஒரு மான்குட்டி போல ஓடிவந்தாள். அவள் தோள் மூட்டு அளவில் இரட்டைச் சடை போட்டு அவற்றை முன்னால் விட்டிருந்தாள். உண்மையில் அவள் ஒரு சிறு புள்ளி மான்குட்டிபோலத்தான் தோற்றமளித்தாள். வந்தவள் என்னைப் பார்த்துவிட்டு-

''My father doesn't know english. what you want sir? ( என் அப்பாவிற்கு ஆங்கிலம் தெரியாது உங்களுக்கு என்ன வேண்டும்?)" என்று கேட்டாள்.

"நான் உங்களுடைய மஞ்சள் கடதாசிப் பூவைப் பெரிதும் இரசிக்கிறேன். மிகவும் அழகாக இருக்கிறது. உலகெங்கும் நான் இது போல் கண்டதில்லை." என்றேன் ஆங்கிலத்தில்.

அவள் பலமாக ஆனால் இதமாகச் சிரித்தாள். சிரித்துவிட்டுத் தந்தையை நோக்கி கிரேக்கத்தில் ஏதோ சொன்னாள். தந்தையாரும் சொண்டுக்குள் சிரித்தார். சிரித்த பின்னர் என்னை ஒரு தடவை பார்த்து விட்டு உள்ளே போய்விட்டார்.

அந்தக் கிரேக்கப் புள்ளி மான் குட்டி என்னைப் பார்த்துப் புன்னகைத்தபடியே-

"எனது அப்பா மிகவும் நல்லவர். அவர் பலமாகத்தான் பேசுவார். உங்களை ஒரு திருடன் என்று அவர் நினைத்துவிட்டார்."

என்று சொல்லிவிட்டு...கீழ்ச் சொண்டைத் தன் பற்களால் கடித்தபடி

"நீங்களும் பார்க்க ஒரு திருடன் போலதான் தெரிகிறீர்கள்" என்றாள் குறும்புடன் என்னைச சீண்டியபடி.

"Thanks for your compliment (உனது வாழ்த்துரைக்கு நன்றி)" என்றேன் நானும் அவளைச் சீண்டியபடி.

"நான் விளையாட்டுக்குச் சொன்னேன்" என்றது அந்தப் புள்ளிமான் குட்டி.

"நானும் விளையாட்டுக்குத்தான் நன்றி சொன்னேன்" என்றேன் நான்.

"சரி, நான் போய்ட்டு வருகிறேன் Bye" என்றேன் அவளை நோக்கி.

அவள் என் கண்களை நேராகப் பார்த்து "Wait for a minute (ஒரு நிமிடம் பொறுங்கள்)'' என்று சொல்லிவிட்டு உள்ளே எங்கோ ஓடிவிட்டாள்.

எதற்காக....? என்று எண்ணமிட்டபடி காத்துக்கொண்டிருந்தேன்.

கொக்கத்தடி போன்ற நீளக் கம்பியொன்றுடன் ஓடி வந்தாள். நான் ஆச்சரியத்துடன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தேன். அவள் அந்த மஞ்சள் கடதாசிப் பூ மரத்தின் உயரமான ஒரு கொப்பை தன் கம்பியால் வளைத்து... அழகான ஒரு கொத்துப் பூக்களைப் பறித்து... அவற்றை ஒழுங்குபடுத்தி என்னருகே வந்தாள்.

"take it with you from Greece (இதை எடுத்துக்கொள்ளுங்கள் கிரேக்கத்தின் நினைவாக)" என்றாள்.

ஆகா... அந்தச் சிறுமியின் இதயமும் உபசரிப்பும்... அந்தப் புள்ளிமான் குட்டி இன்றும் கண்முன்னே தெரிகிறாள் இதய பூர்வமாக என் இரு கைகளையும் நீட்டி அந்த எழில் கொஞ்சும் மஞ்சள் கடதாசிப் பூக்களை வாங்கினேன். இப்பொழுது அவற்றிலிருந்து வாசனை வீசுவது போல் பட்டது. அந்த மணம் என்ன தெரியுமா? அதுதான் அன்பு மணம்.

"மிகவும் நன்றி. இப்பொழுது நான் விளையாட்டுக்குச் சொல்லவில்லை உண்மையாகவே சொல்கிறேன்." என்றேன் நான்.

கலகலவென்று சிரித்தாள். என் கண்களைத் தன் குறுகுறு விழிகளால் மேய்ந்துவிட்டு....

"Bye...Bye..." என்று சொல்லிக் கொண்டே அந்தக் கிரேக்க நாட்டுப் புள்ளி மான்குட்டி ஓடி மறைந்தது.

* * * *

NAWSA தீவில் இன்னுமொரு அதிசயமான ஒரு இடம் இருந்தது. அதை உங்களுடன் கண்டிப்பாகப் பகிர்தல் வேண்டும். அந்த இடந்தான் "Butterfly valley (வண்ணத்துப் பூச்சிகளின் பள்ளத்தாக்கு)".

சுற்றுலா விடுதியில் அவர்கள் அந்த இடத்தைப் பார்வையிடுமாறு கூறியிருந்தார்கள். அந்த இடத்தை நோக்கி Car ஐச் செலுத்தினேன். தெருவெங்கும் அங்கு போவதற்குரிய அம்புக்குறிகளைக் காட்டியிருந்தார்கள்.

அவ்விடத்தை அடைந்ததும் ஒரு காவலாளி வந்து இதற்கு அப்பால் Car இல் போக வேண்டாம் என்றான். Car ஐ அதிலேயே நிறுத்தி விட்டு நடந்தேன்.

**பாகம் -14**

நிறைய சுற்றுலாப் பயணிகளுமாய்... பெரிய பள்ளத்தாக்குமாய்.... இருக்குமென நினைத்த எனக்குப் பெரிய ஏமாற்றம்.

Japan இல் இருந்து வந்த 2 சுற்றுலாப்பயணிகளையும் என்னையும் தவிர வேறு ஒருவரும் அங்கில்லை. வந்த அவர்களும் வேறு திசையில் நடக்கத் தொடங் கினர். நான் தனியே அந்தச் சிறிய பள்ளத்தாக்கில் மிக மெதுவாக அடியெடுத்து வைத்து நடந்து கொண்டிருந்தேன்.

ஒரு 200 மீற்றர் நடந்திருப்பேன். எங்கே வண்ணத்துப் பூச்சிகள்? ஒன்றைக் கூடக் காணோமே என்று நடுவில் நின்று சுற்று முற்றும் பார்த்தேன். ஒன்றைக் கூடக் காண முடியவில்லை. தூரத்தில் ஒன்றிரண்டு பறந்து கொண்டிருந்தன தான். இது ஒரு ஏமாற்று என நினைத்து விட்டுத் திரும்பிப் போக எண்ணித் திரும்புகையில் அந்த அதிசயம் நடந்தது.

(அடுத்த வாரம் )

## போரினால் பாதிப்புற்ற குடும்பங்களுக்கு பொருளாதார ஊக்குவிப்புத் திட்டம்

(திருகோணமலை)

போரினால் பாதிக்கப்பட்ட விதைவைகள் மற்றும் குடும்பங்களுக்குச் சுயபொருளாதார ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் உதவும் முதற்கட்டப்பணி மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கடந்த சனிக்கிழமை சேனையூர் மத்திய கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது.

முதற்கட்டமாக ஒருகோடி ரூபா பெறுமதியான பொருளாதார ஊக்குவிப்பு உதவிகள் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியூடாகத் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்று தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திருகோணமலை மாவட்டப் பணிப்பாளர் கிருபா தெரிவித்தார்.

இனங்காணப்பட்ட, போரினால் பாதிக்கப்பட்ட பயனாளிகளில் 21போ சேனையூர் மத்திய கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டார். திருகோணமலை மாவட்ட மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் குபேரன், விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை மாவட்டப் பொறுப்பாளர் சி.எழிலன் ஆகியோர் நிகழ்வில் பங்குபற்றினர். இப் பரீட்சார்த்தத் திட்டத்தின் கீழ் நெற்செய்கை மேற்கொள்ள வயல் நிலம், மீன்பிடித்தலுக்கு படகு மற்றும வலைகள் போன்ற ஜீவனோபாய அபிவிருத்தி உதவிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. பயணாளிகள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும் என்ற கருத்தில் ஆரம்ப நிகழ்வில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (25)

## கால்நடை வளர்ப்போருக்கு முதற்கட்டப் பயிற்சி வகுப்பு

(மல்லாவி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் இணைந்து ஏற்பாடுசெய்த துணுக்காய்ப் பிரதேசத்திற்குட்பட்ட கால்நடை வளர்ப்போர்களில் 30 பயனாளிகளுக்கான முதற்கட்டப் பயிற்சி வகுப்பு அண்மையில் மல்லாவி கால்நடை வைத்தியர் பணிமனையில் கால் நடை வைத்தியர் செல்வி. கிரிஜகலா பசுபதி தலைமையில் நடைபெற்றது.

இதில் நிர்வாகக் கட்டமைப்புக்கை மேற்கொள்ள இருக்கும் வேலைத்திட்டங்கள், பற்றிய அறிமுகத்துடன் ஆரம்பமாகி கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள், தடுப்பு மருந்து ஏற்றுதல், செயற்கை முறையில் சினைப்படுத்தல், நல்லினக் கால்நடைகளை உருவாக்குதல், கூட்டுறவுச் சங்க செயற்பாடுகள் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் பயிற்றப்பட்டன. இதன் தொடர் பயிற்சி வகுப்புக்களை மாதாந்தம் இரு தடவைகள் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. கால்நடை வைத்திய போதனாசிரியர் குரூஸ், கால்நடை வைத்தியர் ஆகியோர் கருத்துக்களை வழங்கிப் பயிற்றுவித்தனரென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு பிரதேச இணைப்பாளர் கு.ரசிக்குமார் தெரிவித்துள்ளார். (24)

## சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆதரவில் நலன்பேணல் பயிற்சிநெறி

மனிதவள மேம்பாட்டுப் பகுதியுடன் இணைந்து சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் கிளிநொச்சி, மல்லாவி, புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் 2ஆம் கட்ட நலன்பேணல் பயிற்சிநெறி புரட்டாதி மாதம் நடாத்தப்பட்டது.

இப்பயிற்சி நெறியானது வாணிப நிலையங்கள், உணவகங்கள், தங்ககங்கள், அரிசிஆலைகள், வெதுப்பகங்கள், சந்தைகள் ஆகியவற்றில் பணியாற்றும் பல்வேறுபட்ட பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டது.

இப்பயிற்சி நெறியில் முதலுதவி, சுகாதார நடைமுறைகள், தொற்று நோய்களும் தடுப்பும், மனித உடலமைப்புச் செயற்பாடும் பாதுகாப்பும் என்பன தொடர்பாக விரிவுரைகளும், செய்முறைகளும் வழங்கப்பட்ட தோடு, நலன்பேணல் குழுக்கள் அமைத்துச் செயற்படுவதன் அவசியமும் விளக்கப் பட்டது.

இப்பயிற்சி நெறிகளில் பங்குபற்றிய 100இற்கு மேற்பட்ட பயனாளிகளுக்கான மதிப்பீட்டுத் தேர்வு ஒன்றையும் நடாத்துவதற்கு சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு திட்டமிட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது. பயிற்சியின் நிறைவில் சான்றிதழ்கள் வழங்குவதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

### கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

முரசுமோட்டை பரந்தனைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராசா லோகநிதி தே.அ.அட்டை இலக்கம் 806070793 V மற்றும் இந்துபுரம் முறிகண்டியைச் சேர்ந்த சின்னக்கண்டு யோகராணி தே.அ.அட்டை இலக்கம் 735852606 X ஆகியோரது தேசிய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரித்துடையவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம். (சோ,கு)

### காற்றடிக்கும் பம் அன்பளிப்பு

வட்டக்கச்சி மகாவித்தியாலயப் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி துவிச்சக்கர வண்டிகளுக்கு காற்றடிக்கும் பம் தலா ஒவ்வொன்று வீதம் இரு தனி நபர்களால் அதிபரிடம் கடந்த வாரம் கையளிக்கப்பட்டன. இதனால் மாணவர்கள் பெரும் நன்மை அடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (12)



லெப்.கேணல் திலீபன்,கேணல் சங்கர் நினைவு நிகழ்வில் தேசியத் தலைவர்...

# கடந்த வாரத்தில்...



**20.09.2004-26.09.2004**

## 20

* தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கனேடியத் தூதுவர் வலறிறேம் சந்தித்தார்.



கனேடியத் தூதுவருடன்...

* அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்.

* ஜப்பானியத்தூதரக அதிகாரிகள் யாழ்.குடாநாட்டிற்கு விஜயம்.

* பேச்சுக்களை ஆரம்பிக்க புலிகளிடம் ஆயுதங்களைக் கைவிட வேண்டுமெனக் கூறமாட்டோமென சனாதிபதி அமெரிக்காவில் மாநாடு ஒன்றில் தெரிவித்தார்.

## 21

* சர்வதேச சமாதான தினத்தைக் கொண்டாடும் ஐ.நா.வுடனும், அனைத்துலக மக்களுடனும் சமாதானத்தை வேண்டி நிற்கும் தமிழ் மக்களின் சார்பாக இணைந்து கொள்வதில் தமிழீழ விடுதலைப்புலிகள் பெருமை கொள்கின்றனர் என சமாதான தினத்தை முன்னிட்டு புலிகளின் சமாதானச் செயலகம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டது.

* தேசவிரோத செயல்களில் சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு வந்த கருணாவின் சகோதரன் றெஜி உட்பட மூன்றுபேர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் பலி.

## 22

* மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்காப் படையினருக்கு மிடையே சந்திப்பு இடம்பெற்றது.

* நாகர்கோவில் படுகொலையின் 9ஆம் ஆண்டு நினைவுதினம் யாழ்.வடமராட்சியில் அனுஷ்டிக்கப்பட்டது.

* யுத்தத்தின்போது காணாமற்போனோரின் உயிர்களுக்கு அரசாங்கமே பொறுப்பு என கொழும்பு உயர்நீதி மன்றம் தெரிவிப்பு.

* சனாதிபதி சந்திரிகா ஐ.நாடுகள் சபையின் 59ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றிய பேச்சு மீண்டும் யுத்தம் ஏற்படும் நிலையை உருவாக்கக் கூடும் என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் பாராளுமன் றத்தில் தெரிவிப்பு.

* கொரிய நாட்டின் தூதுவர் விம் ஜெ.கொங் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்.

## 23

* டோக்கியோவில் இணக்கம் தெரிவித்த நிதியைக் கட்டம் கட்டமாகப் பெற்று வருகின்றோம் என அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

* திருமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ள ஊர்காவல் படைவீரர்களை விடுவிக்கக்கோரி மேற்கொள்ளப்பட்டு வந்த உண்ணாவிரதப் போராட்டங்களை அமைச்சர்களான மங்கள சமரவீர மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் பொலிஸ்மா அதிபருடன் சென்று பார்வையிட்டனர்.

*. ஈ.பி.டி.பி மத்திய குழு உறுப்பினர் வெள்ளவத்தையில் சுட்டுக்கொலை.

## 24

*. கடற்றொழிலாளர்களின் தொழில் விருத்திக்கென கடற்றொழிற் கல்லூரி விரைவில் அமைக்கப்படுமென கடற்புலிகளின் சிறப்புத்தளபதி சூசை முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் நடைபெற்ற பேராளர் மாநாட்டில் தெரிவித்தார்.



பேராளர் மாநாட்டில்...

* புலிகளின் குரல் நிறுவனத்தின் வெளியீடான "போர் நடந்த மண்ணில்" நூல் வெளியீட்டு விழா யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

*. இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு அவசியம் ஏற்படும் பட்சத்தில் ஐ.நாடுகள் நிறுவனம் பூரண ஒத்து ழைப்பை வழங்குமென ஐ.நா செயலாளா கொபி அனான் சனாதிபதியிடம் தெரிவிப்பு.

## 25

* கனடா ரொரன்ரோ நகரில் பொங்கு தமிழ் நிகழ்வு மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

*. ஈ.பி.டி.பி குழுவைச் சேர்ந்த ஒருவர் நெல்லியடி-பருத்தித்துறை வீதியின் முடக்காட்டுப் பகுதி வீதியோரமாகக் வெட்டிக்கொலை.

* .நாங்கள் பயங்கரவாதிகள் அல்ல: எம் உரிமைகளைப் பெறத்துடிக்கும் மக்கள் அமைப்பு என கனடா பொங்குதமிழ் நிகழ்வுக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச் செல்வன் வழங்கிய செய்தியில் தெரிவிப்பு.

## 26

*. தியாகி லெப்.கேணல் திலீபன் அவர்களின் 17ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகளின் இறுதி நாள் நிகழ்வு தாயகமெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.



லெப்.கேணல் திலீபன் நினைவாக

* பலஸ்தீன நாட்டின் அரசியல் நிபுணர் குழு யாழ். குடாநாட்டிற்கு விஜயம்.

* முல்லைத்தீவு மாவட்டம் வற்றாப் பளையிலுள்ள சூரிபுரம் கிராமத்தில் கேணல். சங்கர் அவர்களின் நினைவாக மாலை நேரக்கல்வி மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.



கேணல் சங்கர் நினைவாக...

*. இலவச மழலைகள் கணினிப்பூங்கா கிளிநொச்சியில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனால் திறந்து வைக்கப்பட்டது.



மழலைகள் மகிழ்வில்...

* தியாகி லெப்.கேணல் திலீபன், கேணல் சங்கர் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார்.



கனடா பொங்கு தமிழ் நிகழ்வில்...

# கடந்த காலங்களில் மேல்மாகாணத்தில் அதிகளவான குற்றச் செயல்கள்

## பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)
கடந்தகாலங்களில் மேல்மாகாணத்திலேயே அதிகளவான குற்றச் செயல்கள் அறிவிக்கப்பட்டுள்ளதென சிறிலங்காவின் பிரதிப்பாதுகாப்பமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனால் மாகாணத்திலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களையும் இணைத்து விசேட செயற்திட்டம் ஒன்றை நடாத்த அரசாங்கம் தயாராகியுள்ளதென தெரிவித்துள்ளார்.

குற்றச்செயல்களைத் தடுப்பது தொடர்பாக தேசிய ஆலோசனைச் சபையில் நேற்று முன்தினம் உரையாற்றியவேளை அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில் 13 - 03 - 1942



ஆண்டவன் அடியில் 26 - 09 - 2004

## திருமதி. முருகேசு தங்கம்மா

எமது பாடசாலையின் ஆய்வுகூட உதவியாளர் மு.மோகனதாஸ் (மோகன்) அவர்களின் அன்புத்தாயார் திருமதி. முருகேசு தங்கம்மா அவர்களிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பணியாளர்கள், மாணவர்கள்,
கிளி/இராமநாதபுரம் ம.வி.

(சி-10442)

## பெண்ணின் சடலம் மீட்பு

(கொழும்பு)
மேல் மாகாணத்தில் சடலம் ஒன்றை அப்பகுதிப் பொலிசார் நேற்று முன்தினம் கண்டெடுத்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

இப் பகுதி வீடொன்றினுள் இருந்து பெண் ஒருவரின் சடலத்தைப் பொலிசார் கண்டெடுத்துள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முன்னர் அப்பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாமெனப் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## கொழும்பு, கம்பகாவில் தொடர்ந்து மழை

(கொழும்பு)
கொழும்பு, கம்பகா போன்ற தென்பகுதி மாவட்டங்களில் சில தினங்களாகப் பெய்த கடும் மழையால் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகின்றன. இதன் காரணமாக மக்களின் அன்றாட இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளதாகத் தென்பகுதிச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதுதவிர பல பகுதிகளில் மண்சரிவு அபாயமும் ஏற்பட்டுள்ளதாகவும், அப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டு வருவதாகவும்தெரியவருகின்றது.

# புதிய பணிமனை திறப்பு விழா

யாழ்.சாலை,பரந்தனில் அமைக்கப்பட்டுள்ள வட பிராந்திய பார ஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய பணிமனை திறப்பு விழா எதிர்வரும் 2004.10.02 ஆம் நாள் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு வைபவ ரீதியாக நடைபெறவுள்ளது. சங்கத்தில் உறுப்புரிமை பெற்ற உரிமையாளர்கள்,சாரதிகள்,நடத்துனர்கள் அனைவரையும் தவறாது இவ் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பணிப்பாளர்சபை,
பணியாளர்கள்,
வ.பி.பா.ஊ.கூ. சங்கம்
பரந்தன்
கிளிநொச்சி.

(சி-10438)

# 2004/2005 பெரும்போகப் பயிர்ச்செய்கை - இரணைமடு

1951ஆம் ஆண்டின்1ஆம் இலக்கச் சட்டத்தாலும், 1968ஆம் ஆண்டின்48ஆம் இலக்கச்சட்டத்தாலும் திருத்தப்பட்ட 1940ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க நீர்ப்பாசனக்கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 2004/2005ஆம் ஆண்டிற்கான பெரும்போகப் பயிர்ச்செய்கைக்காக இரணைமடுக்குளக் கூட்டத்தினைக் கூடி முடிவுசெய்ய முடியாத நிலை உள்ளதால், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராகிய திருநாவுக்கரசு இராசநாயகம் ஆகிய நான் எனக்களிக்கப்பட்ட விசேட அதிகாரத்தின் மூலம் 2004 செப்ரெம்பர் மாதம் 29ஆம் திகதி அன்று பின்வரும் பயிர்ச்செய்கை அட்டவணையை இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

01. விஸ்தீரணம்- இத்திட்டத்தின் கீழ் அடங்கும் நீர்ப்பாசனப் பதிவேட்டிலுள்ள முழுவிஸ்தீரணம்.

02. விதைக்கும் நெல் இனம்- 3-3½மாதம்
4-4½மாதம்

03. இறுதி விதைப்புத் திகதி:- 3-3½மாதம் 30.11.2004 வரை
4-4½ மாதம் 15.11.2004 வரை

04. ஆரம்ப நீர் விநியோகம:- 20.11.2004

05. இறுதி நீர் விநியோகம்:- 20.03.2005

06. வாய்க்கால் துப்புரவு செய்தல:-15.11.2004 - வரை
07. கால் நடைகட்டுப்படுத்தல:- 15.11.2004 -30.03.2005 வரை

வாய்க்கால் துப்புரவு செய்யத் தவறின் பாகத்திற்கு ரூபா 50.00தண்டப்பணமாக அறவிடப்படும்.

கமநலசேவைப்பெரும்பாக உத்தியோகத்தரால் நியமிக்கப்படும் கால்நடை பிடிப்பவர்களால் பிடிக்கப்படும் கால்நடைகளுக்கு வழமைபோல் நட்டம் அறவிடப்படும். நட்டம் கட்டத் தவறும் பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் அக்கால்நடைகள் விற்கப்படும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-10440)

# சாவு அறிவித்தல்

## சுப்பையா ஞானம் (பராசக்தி)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், விசுவமடு தொட்டியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா ஞானம் (பராசக்தி) 26.09.2004 ஆம் திகதி மகரகம வைத்தியசாலையில் சுகயீனம் காரணமாகக் காலமாகிவிட்டார். ஆன்னார் விசுவன் சின்னாச்சியின் அன்பு மகளும், வேலாயு தபிள்ளை சுப்பையா என்பவரின் அன்பு மனை வியும், சிவஞானம் சுரேஸ், சிவஞான ரமேஸ், சிவஞான சுபாஸ், தர்சனகுமாரி, சிவஞானராகீஸ், சிவஞானஜோதீஸ், அமுதவர்சனகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும்; வேலாயுதபிள்ளை, பூமணி ஆகியோரின் அன்பு மருமகளும், அன்னலிங்கம், மகாலிங்கம் (மாவட்ட வைத்தியசாலை கிளிநொச்சி) தவமணி, பூபாலசிங்கம் (சுவிஸ்), ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 29.09.2004 காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பரந்தன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றோம்.

தகவல்:-
வி.மகாலிங்கம்
(சகோதரன்)

6ஆம் ஒழுங்கை,
முல்லை வீதி,
பரந்தன்.

(5135)

## விற்பனைக்கு

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் நான்குபரப்புக் கொண்ட மேட்டுத்துண்டுக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு
024 4589416
077 6321271
077 6145316

(சி-10419)

# ஒரு கொடியில் பூத்த இரு மலர்கள்

## 11ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 20 - 01 - 1974



தாயக மண்ணில் 29 - 09 - 1993

### 02 ஆம் லெப். நவீனன்

செல்வராசா - செல்வேஸ்வரன்

சம்பவம்:- யாழ்.தேவி நடவடிக்கை எதிர்ச்சமரின் போது

*விடுதலை உணர்வோடு வீறுகொண்டெழுந்த*
*எங்கள் செல்வமே செல்வேஸ்வரா!*
*மண்ணிலே நீ விதையாகி பதினொரு வருடங்கள்*
*ஆனது அண்ணா! பதினொரு வருடங்களானதும்*
*எங்கள் மனதை விட்டு உன் நினைவு*
*எட்டிச் செல்லவில்லை.*
*நவீனன் என்று அன்போடு அழைக்கப் பெற்றவனே!*
*யாழ்தேவி நடவடிக்கையில்*
*நீ சரியவில்லை: சரித்திரமாகி விட்டாய்.*

## 02ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 23 - 11 - 1977



தாயக மண்ணில் 16 - 07 - 1995

கடற்புலி

### 02ஆம் லெப். நதியரசி

செல்வராசா - சாந்தவதனி (சாந்தா)

சம்பவம்:- காங்கேசன்துறையில் தரித்துநின்ற கட்டளைக்கப்பல் எடித்தாரா மீதான தாக்குதலின் போது

*ஆழ்கடல் தோணியைப் போல்*
*ஆடுகிறோம் உன் நினைவில்.*
*ஆடிவரும் அலைகளிடையே எம்*
*விழி நீரும் பெருகுது சாந்தா!*
*மனதினில் எமக்கு நீ என்றுமே*
*மறையாத குலவிளக்கு.*
*ஓயாமல் தாய் மண்ணுக்காய் உழைத்தாய்-நீ*
*ஓய்வாக விழி மூடித்தூங்கு.*
*நிச்சயம் மலரும் தமிழீழம்.*

இவர்களுடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தகவல்,
குடும்பத்தினர்,
முள்ளிவாய்க்கால்மேற்கு, முல்லைத்தீவு.

(4693)

# தி.முன்னேற்றக் கழகக் கூட்டணியை உடைக்க மேற்கொள்ளப்படும் முயற்சி வெற்றியளிக்காது

## ஜெயலலிதாவை ச் சாடுகிறார் டாக்டர் ராமதாஸ்

(சென்னை)

தமிழகத்தில் தி.மு.க கூட்டணியை உடைக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் வெற்றிபெறா தென்று, பா.ம.கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வி.கே.வாசன் ஆகியோர் கூறியுள்ளனர்.

சென்னையில் செய்தியா ளர்களிடம் கடந்த சனிக்கிழமை கருத்துத் தெரிவித்த டாக்டர் ராமதாஸ் சோனியாவை அழைத்து நடத்தவுள்ள பாராட்டு விழா பற்றிக் கூட்டணிக் கட்சிகளுடன் தமிழ் நாடு காங்கிரஸ் கலந்தாலோசிக்காதது தவறு என்று கூறக்கூடாது என்றும், ஒவ்வொரு கட்சியும் நடத்தும் நிகழ்வுகளுக்கு மற்றைய கட்சியுடன் ஆலோசனை நடத்த வேண்டியதில்லை.என்றும் அக்கட்சியின் விழாவிற்கு அழைப்பு வந்தால் போகலாம். தி.முக கூட்டணியை உடைக்க வேண்டுமென்ற நோக்கில் பொலிஸ் துறைமூலம் தமிழக ஆளும் கட்சி முயற்சிக்கின்றது என்றும், தமிழ் மொழியை அழித்து விட திரைமறைவில் முயற்சி செய்பவர்களின் ஆட்சியில் தமிழ் மொழி செம்மொழி அறிவிப்புக்கு இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது என்றும் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.

இது குறித்து காங்கிரஸ் தலைவர் வி.கே. வாசன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்:- பொறுப்பான பதவியை ஏற்கும் முதல்வர் ஜெயலலிதா காங்கிரஸ் தலைவர் சோனியாவை கடும் சொற்களால் விமர்சித்துவிட்டு ஒரே வார்த்தையால் அவற்றை முடிமறைக்க முயற்சிக்கின்றார். அவரைச் சார்ந்தவர்கள். வேண்டுமானால் அவற்றை ஒப்புக்கொள்ளலாம். பொது மக்கள் அதனை ஏற்க மாட்டார்கள். முதல்வரின் டில்லிப் பேட்டிக்குப் பிறகு மாநில அரசிடம் காங்கிரஸ் கட்சி மென்மையாக நடந்து கொள்வதாகக் கருதுவது தவறு என்றும் அவர் கூறினார்.


11 ஆம் ஆண்டு நினைவுகளில்...

மண்ணில் ஒருவனாக 21 – 03 – 1973



மண்ணுக்கான ஒருவனாக 29 – 09 – 1993

கப்டன் வினோதன்

(நாகலிங்கம் உதயகுமார்)

நீ பிரிந்தது
எப்படி உண்மையாகும்?
உனது துப்பாக்கி
இன்னும் சடசடக்க...
உனது உணர்வுகள்
இன்னும் உயிராக...

உனது அர்ப்பணிப்பு
இன்னும் பசுமையாக...
இன்னும்...
நீ பிரிந்தது மட்டும்
எப்படி உண்மையாகும்?

இல.146,ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி. (5136)

குடும்பத்தினர்,
நண்பர்கள்,


# முஷாரப், மன்மோகன்சிங் பேச்சு பாகிஸ்தான் பத்திரிகைகள் பாராட்டு

பாகிஸ்தான் அதிபர் முஷாரப், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இடையே பேச்சு சுமுகமாக நடந்து முடிந்துள்ளதைப் பாகிஸ்தான் பத்திரிகைகள் பாராட்டியுள்ளன. மாறி மாறிக் குறை கூறுவது, வெறுப்பை வெளிப்படுத்துவது, கோபத்தைக் கொட்டுவது என்ற எதுவுமே இல்லாது பேச்சுவார்த்தை நடந்து முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது என்றும் அப்பத்திரிகைகள் எழுதியுள்ளன.

இரு தலைவர்களும் நல்லெண்ணம் மற்றும் நட்புறவுக்கான சூழ்நிலையில் அமர்ந்து பேசியுள்ளனர். பிரச்சினைக்கு எப்படியும் தீர்வு கண்டுவிட வேண்டும் என்ற உறுதி அவர்களிடம் இருப்பதை இது வெளிப்படுத்துகிறது. மேலும், இருவரும் தங்களது நிலையிலேயே தொடர்ந்தும் இருக்காது, சற்றே இறங்கி வந்துள்ளனர். காஷ்மீர் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்கப்புதிய வழிகளை ஆராய்வதற்கு இது ஊக்கமளிக்கிறது என்று டான் பத்திரிகை கூறியுள்ளது. 'பேச்சுவார்த்தை தொடங்கும் முன்னரே இரு தலைவர்களும் தெரிவித்த கருத்துக்கள் பேச்சை எப்படியும் வெற்றிகரமாக முடுக்கிவிட வேண்டும் என்ற உறுதியில் அவர்கள் இருந்ததைச் சுட்டிக்காட்டுவதாக இருந்தது.பிரச்சினையைத் தீர்க்கும் நடவடிக்கைகளை முடுக்கிவிட இரு தலைவர்களுமே உறுதி அளித்துள்ளனர்' என்று தி நேஷன் பத்திரிகை கூறியிருக்கிறது.


பாராட்டும் என்றும் நல்லாசிகளும்



செல்வன்:- சிவராசா அபிதாஸ்

கிளி/கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயத்தில் பத்து வருடங்களுக்கு மேலாக இல்லாத ஓர் வெற்றியைப் பெற்றுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். இவருக்கும் அதிகூடிய புள்ளியை (123 புள்ளிகள்) பெற்ற கதிர்காமநாதன் நிரஞ்சன் என்பவருக்கும் இவற்றுக்கு மூலகாரணமாக இருந்த இப்பாடசாலையின் முதல்வர் இரவிக்குமார் அவர்களுக்கும்,ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்களும்,நல்லாசிகளும் என்றும் மேலோங்குக.

*அ. சிவலோகநாதக்குருக்கள்,*
*(ஜெயம் ஐயா)*
*நாகதம்பிரான் கோவில்,*
*புளியம்பொக்கணை.*

(5137)



# விற்பனை முகவர்களிற்கான

# கேள்வி கோரல்

## யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களுக்கான உப்பு விநியோகம்

**மேற் குறிப்பிட்ட சேவைக்கான அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள், பதிவு செய்யப்பட்ட விற்பனை முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் ஆனையிறவு உப்பு உற்பத்திப் பேட்டைச் செயலகத்தில் மீளளிக்கப்படமுடியாத கட்டணம் ரூபா 5000/=(ஐயாயிரம்) செலுத்திப் பெறப்பட்ட கேள்விப் படிவத்தினை 05.10.2004 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளலாம்.**

**கேள்விப்படிவங்கள் 08.10.2004 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகளை "பணிப்பாளர்" உப்பு உற்பத்திப் பேட்டை பொருண்மிய மதியுரையகம் ஏ9 சாலை, ஆனையிறவு என முகவரியிட்டு, பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கலாம்.**

**கேள்வி சமர்ப்பிக்கப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களுக்கான உப்பு விநியோகம்" என்று குறிப்பிட வேண்டும்.**
**மேலதிக விபரங்களை "ஆனையிறவு உப்பு உற்பத்திப் பேட்டை" செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

**பணிப்பாளர்,**
**உப்பு உற்பத்திப் பேட்டை,**
**ஏ-9 சாலை,**
**ஆனையிறவு.**

(சி.10237)

# வலுக்குறைந்த அணிகளுடன் விளையாடுவது வலுவான அணிகளின் தார்மீக கடமை



**– கங்குலி**

ஐ.சி.சி. கோப்பைப் போட்டிகளில் மோசமாக விளையாடியது, வரவுள்ள அவுஸ்திரேலியத் தொடரின் முடிவுகளில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் கங்குலி தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவுடனான தொடர் இரு அணிகளுக்குமே மிக முக்கியமானது. ஒட்டுமொத்த உலகமும் ஆவலுடன் போட்டிகளைக் காணக் காத்திருக்கிறது. அவுஸ்திரேலிய அணியுடன் ஏற்கனவே சிறப்பாக விளையாடி இருக்கிறோம்.

எஸ்.எஸ்.பால் தொடர்ந்து சிறப்பாகப் பந்துவீசி வருகிறார். அவர் இந்திய அணிக்காக விளையாடும் தறுவாயில் இருக்கிறார். ஆனால் அவர் தொடர்ந்து சிறப்பாக விளையாட வேண்டும். உள்நாட்டில் விளையாடுவதற்கும் வெளிநாட்டு அணிகளுடன் விளையாடுவதற்கும் வித்தியாசமிருக்கிறது.

டெஸ்ட் ஆட்டங்களில் சேவாக்தான் தொடக்க ஆட்டக்காரராகக் களமிறங்குவார். மற்றோர் இடத்திற்கு யுவராஜ் சிங்கும், ஆகாஷ் சோப்ராவும் போட்டியிடுகின்றனர். சமீப காலங்களில் டெஸ்ட் ஆட்டங்களில் சேவாக் சிறப்பாக விளையாடியுள்ளார். பாகிஸ்தானுடன் 300இற்கும் மேலான ஓட்டங்களைக் குவித்தார். வலிமை குறைவான அணிகளும் ஐ.சி.சி கோப்பைப் போட்டிகளில் சேர்க்கப்பட்டது சரிதான். இலங்கை கூட சிறந்த அணியாக உருவெடுக்க நீண்டகாலம் பிடித்தது. ஆகவே வலுக்குறைவான அணிகளுடன் விளையாட வேண்டியது வலுவான அணிகளின் பொறுப்பு. அப்போதுதான் வலுக்குறைந்த அணிகள் தங்கள் திறமையை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்றார்.



பயிற்சியில் ஈடுபடும் அவுஸ்திரேலிய அணி.

## அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்டில் வி.வி.எஸ். லக்ஸ்மன் சவாலாக இருப்பார்



கிரிக்கெட் ரசிகர்களாக ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் இந்தியா - அவுஸ்திரேலியா இடையேயான டெஸ்ட் தொடர் எதிர்வரும் 6ஆம் திகதி பெங்களூரில் தொடங்குகின்றது. இரு அணிகளுக்கும் இடையேயான 4 டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் டெஸ்ட் 6ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை நடக்கிறது.

இந்தத் தொடரில் இந்தியத் துடுப்பாட்ட வீரர்களில் சாதிக்கப் போவது யார் என்பதுதான் இப்போதைய கேள்வி. டெஸ்ட் போட்டியில் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர்களாக இருப்பவர்கள் ராவிட், டெண்டுல்கர், அணித் தலைவர் கங்குலி, வி.வி.எஸ். லக்ஸ்மன் ஆகியோர் ஆகும். இதில் மற்றவர்களை விட வி.வி.எஸ். லஸ்க்மனே முன்னிலை வகிக்கிறார்.

அவர் அவுஸ்திரேலியாவுக்கு சவாலாக இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏனென்றால் அந்த அணிக்கு எதிராக அவர் இதற்கு முன்பு சிறப்பாக விளையாடி இருக்கிறார். அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக 10 டெஸ்டில் விளையாடி 1218 ஓட்டம் எடுத்துள்ளார். 4 சதமும், 4 அரைச் சதமும் அடங்கும். 1999-2000ஆம் ஆண்டு தொடரில் 221 ஓட்டமும் (3 டெஸ்ட்), 2000-2001 தொடரில் 503 ஓட்டமும் (3 டெஸ்ட்), 2003-2004 தொடரில் 494 ஓட்டமும் (4 டெஸ்ட்) எடுத்தார்.

## மீண்டும் களமிறங்குகின்றார் பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ்



ஐந்து மாத இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் சர்வதேச டென்னிஸ் அரங்கிற்கு வருகிறார் கிம் கிளைஸ்டர்ஸ்

பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளைஸ்டர்ஸ்டென்னிஸ் தர வரிசையில் முதல் இடம்வகித்தவர். இடது கை மணிக்கட்டில் காயம் காரணமாகக் கடந்த மே மாதம் முதல் இவர் போட்டிகளில் பங்கேற்கவில்லை. இதன் காரணமாக, தரவரிசையில் ஏழாவது இடத்திற்கு இறங்கினார்.

காயம் தற்போது முழுமையாகக் குணமாகிவிட்டது. மீண்டும் களமிறங்குகிறார் கிம் இவ்வார இறுதியில் பெல்ஜியம் ஓபன் டென்னிஸ் தொடர் நடக்கிறது. ஐந்து மாத இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் இந்தத் தொடரில் திறமை காட்டப்போகிறார். இந்தத் தகவலை கிம் கிளைஸ்டர்சின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

## கிராண்ட் பிரீ கார்ப்பந்தயம் பிரேசில் வீரருக்கு முதல் இடம்

சீனாவில் உள்ள ஷாங்காய் நகரில் பார்முலா 1 கிராண்ட் பிரீ கார்ப் பந்தயம் நடந்தது. இதில் பிரேசிலைச் சேர்ந்த ரூபன் பாரி செல்லோ வெற்றி பெற்றார். உலக சம்பியனான மைக்கேல் சுமேக்கர் மிகுந்த ஏமாற்றம் அளித்தார். அவர் 12ஆவது இடத்தையே பிடித்தார். இதுவரை நடந்த போட்டி முடிவில் சுமேக்கர் (ஜேர்மனி) 136 புள்ளிகள் பெற்று முன்னிலையில் உள்ளார். பாரிசெல்லோ (பிரேசில்) 108 புள்ளிகளுடனும், ஜென்சன்பட்டன் (இங்கிலாந்து) 79 புள்ளிகளுடனும் உள்ளனர்.

## டேவிட் கிரவ்னி மீது சீறிப்பாயும் முன்னாள் தலைவர் நாசர் ஹுசைன்



இங்கிலாந்து கிரிக்கெட் சபை தேர்வுக்குழுவுத் தலைவரான டேவிட் கிரவ்னி மீது முன்னாள் அணித்தலைவர் நாசர் ஹுசைன் சீறிப் பாய்கிறார்.

கிரவ்னி தனது பதவி மீது மட்டுமே அக்கறை காட்டுவதாகக் கூறிய அவர், தேர்வுக்குழு முழு அதிகாரத்துடன் இல்லாமல் பலமற்று விட்டது எனக் கூறியுள்ளார். இந்தச் சந்தர்ப் பத்தில் தேர்வுக்குழுவில் அங்கம் வகிக்கும் முன்னாள் வீரர்களான இயன் பொத்தம், மைக்கட்டிங் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

நாசர் ஹுசைன் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றுத் தற்போது ஊடகத்துறைப் பேச்சாளராகப் பணியாற்றுகிறார்.




## கணிப்புகளை பொய்யாக்கிய ஐ.சி.சி. கிண்ண இறுதிப்போட்டி

**அலன்போடர்**



மினி உலகக்கோப்பை கிரிக்கெட்டைப் பொறுத்தவரை நானுட்பட பலபேரது கணிப்புகள் தவறாகவே முடிந்தன. இறுதிப் போட்டிக்கு அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகள் தகுதி பெறும் என்று கணித்திருந்தேன். கணிப்புத் தவறினாலும் இம்முறை இறுதிப்போட்டி நல்ல விறுவிறுப்புள்ளன.

இங்கிலாந்தின் முந்நாள் வீரர் அலன்போடர் தெரிவித்துள்ளார். இந்தத் தொடர் முழுவதும் சிறப்பாக விளையாடிய இங்கிலாந்து முக்கியமான நேரத்தில் கோட்டைவிட்டுவிட்டது. கடைசி ஓவர்களில் ஆஸ்லி கைல்ஸ் துடுப்பாட்டத்தைப் பார்த்தபோது கொஞ்சம் கவனமாக விளையாடினால் யாரும் அந்த ஆடுகளத்தில் ஓட்டமெடுக்கமுடியும் என்பது தெரிந்தது.

மேற்கிந்திய அணியைப் பொறுத்தவரை 1979இற்குப் பின்னர் அவர்கள் கைப்பற்றும் முக்கியமான தொடர் இது. உலகை நடுநடுங்கவைத்த அந்த அணியில் கிரிக்கெட் வரலாற்றை புரட்டிப்பார்த்தால், ஒரு கோப்பை கைப்பற்ற இவ்வளவு இடைவெளியா? என நம்புவது கஷ்டமாக இருக்கும்.

இந்த வெற்றிக்குக்காரணமாக இயான்பிராட்ஷா, கர்ட்னி பிரவுண் இருவரது துணிச்சலையும் பாராட்டலாம். வரிசையாகத் தோல்வி, அது தவிர சமீபத்திய இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டிருக்கும் மேற்கிந்திய மக்கள் முகத்தில் இந்த வெற்றி ஒரு புன்னகையை ஏற்படுத்தலாம்.

## இங்கிலாந்து செய்ததவறே கிண்ணத்தை இழக்கக் காரணமாகியது



-ரவிசாஸ்திரி

மினி உலகக்கோப்பை இறுதிப்போட்டி ஒரு எதிர்பார்க்காத முடிவைத் தந்தது. 147 ஓட்டங்களுக்கு 8விக்கெட்டுக்களை இழந்திருந்த அணி கடைசியில் கோப்பையை வென்றது மறக்க முடியாதது. பிராட்ஷா, பிரவுண்ட் ஆட்டம் சிறப்பாக இருந்தது. நீண்ட ஆண்டுகளுக்குப் பின்னர் பின் வரிசை ஆட்டக்காரரர்கள் நின்று விளையாடி வெற்றி தேடித் தந்ததைப் பார்க்க முடிந்தது.

முக்கிய விக்கெட்டுக்களை இழந்து மேற்கிந்தியத்தீவு அணி இக்கட்டான நிலையில் இருந்தபோது வெளிச்சம் இன்மை காரணமாகப் போட்டியை ஒத்திவைக்கலாமா என அம்பயர்கள் கேட்டனர். இதற்கு மறுப்புத் தெரிவித்த பிரவுண்ட் பிராட்ஷாவின் தன்னம்பிக்கையைப்பாராட்ட வேண்டும். இவர்கள் எடுத்த தைரியமான முடிவால் மேற்கிந்தியத்தீவு கோப்பையை வென்றது. இங்கிலாந்தின் அணித்தலைவர் மைக்கல்வோன் மிகப்பெரிய தவறு செய்து விட்டார். ஆட்டத்தின் கடைசி நேரங்களில் இவர் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு மட்டுமே வாய்ப்பு அளித்து வந்தார். சுழற்பந்து வீச்சாளர் கைல்சை இவர் அழைக்கவில்லை. இவருக்கு வாய்ப்பு அளித்திருந்தால் முடிவு ஒரு வேளை மாறியிருக்கலாம். கடைசி நேரங்களில் வேகப்பந்தை விடச் சுழற்பந்தை எதிர் கொள்வது மிகவும் சிரமம். இந்தத் தொடரின் தொடக்கத்தில் இருந்தே கவனிக்கப்பட்ட வீரர் பிளிண்டொப் எதிர்பார்த்ததைப் போலவே இவர் சிறப்பாகச் செயற்பட்டார். மொத்தத்தில் அவுஸ்திரேலியாவுக்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது சிறந்த அணியாக இங்கிலாந்தைக் கூறலாம்.

## கிளி.யில் இன்றும், நாளையும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கராத்தே வீரவீராங்கனைகள் பங்கேற்கும் பயிற்சியும், கற்கை நெறியும்

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 8ஆவது டான் சென்சி மசோ கவாசோ (SENSEIMASAO KAWASOE) அவர்களின் சர்வதேச கராத்தே தொடர்பான சென்சி லிசிமித் (SENSEICEIGH SMITH) என்பவர் தமிழீழத்தில் உள்ள அனைத்து கராத்தே வீரர்களின் திறன்களை நேரில் பார்வையிட்டு அவர்களுக்கான பயிற்சி மற்றும் கற்கை நெறியினை வழங்கவுள்ளார்.

இன்றும், நாளையும் நடைபெறவுள்ள மேற்படி கற்கை நெறியில் தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட கராத்தே வீரவீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வு கிளி. மத்திய விளையாட்டு மைதானத்தில் மாலை 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்விற்காக லிசிமித் லண்டனில் இருந்து நேற்று கிளிநொச்சிக்கு வருகை தந்துள்ளார்.இப்பயிற்சி நெறிக்கான ஏற்பாட்டை தமிழீழ கராத்தே சம்மேளனத்தினர் மேற்கொண்டுள்ளனர்.



லண்டனில் இருந்து வருகை தந்த சர்வதேச கராத்தே தொடர்பாளர் சென்சி லிசிமித், தமிழீழ விளையாடுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா அவர்களுடனான கலந்துரையாடலின்போது. (லோ)

## இந்தியா வெற்றி பெறும்

**டெண்டுல்கர்**

இந்திய கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் நேற்று முன்தினம் தனது தாயார் மற்றும் மனைவி குழந்தைகளுடன் ஷிரிடி சாய் பாபா கோவிலுக்கு சென்றார். அங்கு அவர் சாய்பாபாவை சந்தித்து ஆசி பெற்றார். பின்னர் டெண்டுல்கர் நிருபர்களிடம் பேசுகையில் “அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி வெற்றி பெறும்” என்று கூறினார்.

## எதென்ஸ் பாரா ஒலிம்பிக் மூன்று பதக்கங்கள் பறிப்பு

பாராஒலிம்பிக் போட்டியில் ஊக்க மருந்து பயன்படுத்தியதற்காக மூன்று பேரின் பதக்கம் பறிக்கப்பட்டது.கிரீஸ் தலைநகர் எதென்சில் உடல் ஊனமுற் றோருக்கான பாராஒலிம்பிக் போட்டிகள் நடக்கின்றன. இதில் நான்கு வீரர்கள் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து உட்கொண்டது நேற்று நிருபிக்கப் பட்டது. இச்சோதனையில் சிக்கியுள்ள, பளுதூக்குதலில் வெண்கலம் வென்ற ஈரானின் அலிஹுசேனி (60கி.கி), சிரியாவின் யூனிஸ் (56கி.கி)இருவரும் பதக்கங்கள் பறிக்கப்பட்டன. மற்றொரு பளுதூக்குதல் வீரரான எஸ்தோனியாவின் அலெக்சாண்டர் சோதனையில் சிக்கியுள்ளார். இவர்கள் இரண்டு ஆண்டுகள் சர்வதேச தொடர்களில் பங்கேற்கவும் தடைகள் விதிக்கப்பட்டுள்ளது. தவிர, சைக்கிளோட்டத்தில் வெள்ளி வென்ற சுலோவாகியாவின் ஜுராஜ் பெட்ரா விக்கின் பதக்கமும் பறிக்கப்பட்டது.

## சிந்தனைக்கு



சுதந்திர எழுச்சியின் உந்துதலால் தான் மனித வரலாற்றுச் சக்கரம் சுழல்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர் .

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 29-09-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## நர மாமிசமுண்ணிகளை எவ்வாறு....?

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அமைப்பின் அதிகாரிகள் யாழ். பொலிஸ் நிலையத்தில் தாக்கப்பட்டுத் துரத்தியடிக்கப்பட்டுள்ளனர். இது சிலருக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்திருக்கலாம். ஆனால் இது எதிர்பார்க்க முடியாததோ அன்றி ஆச்சரியத்திற்குரியதோ அல்ல. இவற்றைச் சிறிலங்கா பொலிசார் மற்றும் ஆயுதப்படையினரின் கடந்தகால நடவடிக்கைகளை மனதில் நிறுத்திப்பார்ப்பவர்களுக்குத் தெரியவரும்.

சிறிலங்கா ஆயுதப்படையினைப் பொறுத்து மனித உரிமைகள் என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் அளவிலேயே அதன் செயற்பாடுகள் இருப்பதுண்டு. ஏனெனில், சிறிலங்கா ஆயுதப் படையினர் 'மனிதஉரிமை' என்பதற்கு என்றுமே மதிப்பளித்த தில்லை. அவ்வாறு மதிப்பளிக்கப்பட்டிருக்குமானால், இலங்கையின் அரசியல் வரலாறே வேறாகக்கூட இருந்திருக்கலாம்.

அண்மைக்கால அரசியல் வரலாற்றில் சிறிலங்கா ஆயுதப் படையினரின் மனித உரிமைமீறல் என்பது பட்டியலில் இடப்பட முடியாத அளவில் மிக நீண்டது. தனிமனிதனின் சுயகௌரவத்தைப் பாதிப்பதில் இருந்து கொலைகள் பாலியல் வல்லுறவுகள், அஞ்சத்தக்க சித்திரவதைகள் எனப் பல வகையிலும் இம் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதுண்டு. தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்திற்கான அடிப்படைக் காரணங்கள் வேறானதாக இருப்பினும் தமிழ் மக்களின் தனிமனித உரிமைகள் நசுக்கப்பட்ட போது போராட்டம் மேலும் தீவிரமாகியது என்றே கொள்ளலாம்.

ஈராக் அபுகிறாப் சிறைச்சாலையில் அமெரிக்க இராணுவத்தினரால் ஈராக்கியக் கைதிகள் பாலியல் ரீதியான இம்சைக்கு உள்ளாக்கப்பட்டனர், சித்திரவதை செய்யப்பட்டனர் என்ற செய்திகள் வெளிவந்தபோது உலகமே இதுகுறித்து அதிர்ச்சியும், கண்டனமும் வெளியிட்டன. ஆனால், அதனைவிட மிகமிகக் கொடூரமானதும், நீண்டகாலத்திற்குமான சித்திரவதைகள் சிங்கள ஆயுதப்படையினால் மேற்கொள்ளப்பட்ட போதும் சர்வதேச உலகம் அதனைப் பெரிதாகக் கொள்ளவில்லை. சிறிலங்கா அரசின் பிரச்சாரத்திற்கே செவிசாய்த்தது.

சிறிலங்கா ஆயுதப்படையினர் புரிந்த இம்மனித உரிமை மீறல்களுக்கு சிறிலங்கா ஆட்சியாளர்கள் உறுதுணையாக இருந்தனர். அவர்களால் உருவாக்கிக் கொடுக்கப்பட்டிருந்த பயங்கரவாதத் தடைச்சட்டமும், அவசரகாலச் சட்டமும், ஆயுதப்படைத்தரப்பு கேள்வி நியாயமற்ற ரீதியில் மனித உரிமை மீறல்களை மேற்கொள்ள அனுமதி வழங்கியிருந்தன.

அத்தோடு, சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பின் மனித உரிமை மீறல்களுக்கு ஆட்சியில் இருந்த அரசியல் வாதிகளும் நியாயம் கற்பித்து வந்தனர். கூட்டம் கூட்டமாகத் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டபோதும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட போதும் அதனை ஆட்சியாளர்கள் நியாயப் படுத்தினர். பச்சிளம் பாலகர்களையும், பாடசாலைச் சிறுவர்களையும், பயங்கரவாதிகள் என ஆட்சியாளர்கள் பட்டம் சூட்டினர்.

நூற்றுக்கணக்கில் கைதானவர்கள் கூடக் காணாமற் போயினர். இவர்கள் படுகொலை செய்யப்பட்டு புதைகுழிக்குள் போட்டு மூடப்பட்டனர். இப்படுகொலைகளுடன் சம்பந்தப்பட்ட ஒரு சிலர் தவிர்க்க முடியாத நிலையில் தம்மைக்காத்துக்கொள்ள உண்மைகளைக் கூறியபோதும், அதனைச் சிறிலங்கா அரசோ, வேறு எவருமோ கண்டுகொள்ளவில்லை. சில இராணுவ அதிகாரிகளுக்கு நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டபோதும் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்கவில்லை. அரசே அவர்களைப் பாதுகாத்தது. மாறாக அரசாங்கத்தரப்பில் அவர்களுக்குப் பதவியுயர்வுகளும் உயர்நிலைத் தொழில்களுமே மீண்டும் வழங்கப்பட்டன. இவ் அதிகாரிகளின் மனித உரிமைக்கான செயற்பாடுகள் குறித்து சர்வதேச சமூகம் ஓரளவு புரிந்துகொண்டதாயினும் அதனால் கூட இதுகுறித்து நடவடிக்கை எதையும் மேற்கொள்ளமுடியவில்லை.

இந்நிலையில் திடீரென ஏற்பட்ட யுத்தநிறுத்தமும், புரிந்துணர்வு உடன்பாடும் இப்படிப்பட்ட அதிகாரிகள் மத்தியில் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? நரமாமிச உண்ணிகளை எவ்வாறு திடீரெனத் தாவரப் பட்சனிகளாக்க முடியும்?

ஆகையினால் சிறிலங்காப் பொலிசார் மனிதஉரிமை அமைப்பின் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தியமை ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அதாவது தமது அடிப்படை உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் தற்பொழுது மனித உரிமை அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என்பது மட்டுமே வேறுபாடு. அதாவது தாக்கப்பட்டவர்களே வேறானவர்கள், தாக்கியவர்களும் தாக்குதலுக்குள்ளான காரணம் ஒன்றே. அதாவது உரிமை குறித்துப் பேசியதாலேயே தாக்கப்பட்டனர். இதனை விடுத்து சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு மாறிவிட்டது என யாராவது எண்ணியிருந்திருப்பின் அவர்களே இத்தாக்குதல் குறித்து அதிர்ச்சியடைய முடியும்.

# தேர்தலின்போது அ.அ.பயன்படுத்தின்

# 30 வீதமானோரின் வாக்குரிமை மறுக்கப்படும்

## ஐ.தே.க.பா.உ. ஜோசப் மைக்கல் பெரேரா

அரசாங்கம் அவசரமாகக் கொண்டு வர முயற்சிக்கும் தேர்தலின் போது அடையாள அட்டைகளைப் பயன்படுத்தும் சட்டமூலத்தின் மூலம் நாட்டின் 30 வீதமான வாக்காளர்களின் வாக்குரிமை மறுக்கப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார். நேற்றுக் கொழும்பில் நடை பெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றிய அவர், அரசாங்கம் இந்தச் சட்டமூலத்தை அவசரமாக நிறைவேற்ற முயல்வதன் நோக்கம் என்னவென்பதைத் தம்மால் புரிந்து கொள்ளமுடியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார் அரசாங்கத்தின் இந்த சட்டமூலம் தேர்தல் ஆணையாளரின் பரிந்துரையையும் மீறும் செயல் என அவர் சுட்டிக்காட்டினார். (32)

**பேச்சுக்களை...**

எமது தலைமைப்பீடத்தின் பரிசீலனைக்குட்படுத்தி மக்களிடமும் கையளிக்கபட்டு, முழு ஆணையைப் பெற்ற ஒரு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்ற வகையில் அதில் மாற்றம் செய்ய வேண்டிய தேவை இல்லை. நாம் அதை ஒரு பேச்சுவார்த்தை ஆலோசனை வரைபாகக் கையளித்திருக்கிறோம். பேச்சுக்களின் போது அவை விவாதிக்கப் படலாமே தவிர அதில் மாற்றம் செய்யவேண்டிய தேவையில்லை. அது சம்பந்தமான கருத்துக்கள் எதுவும் முன்வைக்கப் படாத நிலையில் அதை மாற்றுவது பற்றிச் சிந்திக்கவேண்டிய தேவையில்லை. அது தமிழ் மக்கள் தரப்பில் ஒரு உறுதிமிக்க ஆவணமாக உள்ளது.

**★இந்தப்பயணத்தின் போது நீங்கள் சந்திக்கும் வெளிநாட்டு அரச பிரதிநிதிகளுடன் இலங்கை அரசு பேச்சுவார்த் தைக்கு முன்வரவேண்டும் என்ற அழுத்தத்தைப் பிரயோகிக்கு மாறு கூறுவீர்களா?**

நிச்சயமாகத் தற்போது சனாதிபதியும், அவரது அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களும் சர்வதேச அளவில் விடுதலைப்புலிகள்தான் பேச்சுக்குத் தடையாக இருப்பதாகவும் இந்தப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான தாமதங்களுக்குப் புலிகள்தான் காரணம் என்ற ஒரு தவறான நிலைப்பாட்டை முன்வைத்து வருகிறார்கள். ஆனால் இவை உண்மைக்குப் புறம்பானவை. விடுதலைப்புலிகள்தான் பேச்சுவார்த்தையை விரைவாகத் தொடங்க வேண்டும் என்பதையும் ஆரம்பத்தில் இருந்தே இந்த அரசாங்கத்திடம் வலியுறுத்தி வருகின்றனர். ஏனெனில் தெற்கிலே அவர்கள் பேச்சுக்களைத் தொடங்குவதற்கு முன்னர் தங்களுக்குள்ளேயே பல முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு அந்த முரண்பாடுகள் அடிப்படையில் பேச்சு மேசைக்கு வருவதற்கான தயக்கத்தை வெளியில் காட்டாது தவறான ஒருபிரச்சாரத்தை சர்வதேச அளவில் பரப்பி வருகின்றார்கள். ஆகவே நாம் சர்வதேச அளவில் எமது உண்மை நிலைப்பாட்டையும், எமது தலைமைப்பீடத்தினுடைய உறுதியான நிலைப்பாட்டை செல்கின்ற அனைத்து இடங்களிலும் தெளிவாக்க இருக்கின்றோம்.

**★இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்கு உதவி வழங்குவதை நிறுத்துமாறு நீங்கள் சந்திக்கின்ற பிரதிநிதிகளிடம் விளக்குவீர்களா?**

கடந்த காலங்களில் இலங்கை அரசாங்கம் சர்வதேச அளவில் பெற்றுக் கொண்ட உதவிகளை வைத்துக் கொண்டுதான் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை யுத்தத்தை, மனித உரிமை மீறலை பெருமளவில் கட்டவிழ்த்து விட்டது. ஆகவே இனிவரும் காலத்திலும், தமிழ் மக்களை மீண்டும் ஒடுக்குமுறைக்குள்ளாக்குவதற்கு அது பயன்படக்கூடாது என்பது தான் எங்களது எதிர்பார்ப்பு. எங்கள் மக்களது எதிர்பார்ப்பை அடிப்படையாக வைத்துத்தான் சர்வதேச சமூகத்தினது எதிர்பார்ப்பும் இருந்திருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த நிலைப்பாட்டில் சர்வதேச சமூகம் உறுதியாக இருக்கின்ற போதுதான் உறுதியான தீர்வைப் பெறுவதற்கான முயற்சிகளில் இலங்கை அரசாங்கத்தை ஈடுபடச செய்யலாம்.

**★திருகோணமலையில் கைது செய்யப்பட்ட ஊர்காவல் படை விவகாரம் தொடர்பாக கண்காணிப்புக் குழுவுடன் பேசுவீர்களா?**

கண்காணிப்புக் குழுத்தலைவரை இன்று நாம் சந்திக்க இருக்கிறோம் அவர்களிடம் நாம் தெளிவாகக் கூறியிருக்கிறோம். கைது செய்யப்பட்டு வைத்திருக்கின்ற எமது போராளிகளை விடுவிக்கின்ற போது எமது பிரதேசங்களுக்குள் ஆயுதங்களுடன் வந்தவர்களை யுத்த நிறுத்த மீறல் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டு எமது தடுப்பிலே இருப்பவர்களையும் நாங்கள் விடுவிக்கத் தயாராக இருக்கின்றோம். இலங்கை அரசாங்கம் இதற்கு ஒரு நல்ல முடிவை எடுக்குமேயானால் இதற்கான தீர்வைச் சுலபமாகக் காணலாம்

**★சமாதான முயற்சிகள் தேக்கம் அடைந்திருக்கின்றது. இந்த நிலையில் நீங்கள் வெளிநாட்டுக்கு மேற் கொள்கின்ற இந்த விஜயத்தில் எதனைச் சாதிக்க முடியுமென நீங்கள் கருதுகிறீர்கள்?**

எங்களைப் பொறுத்த வரையில் எங்களது மக்களுடைய தெளிவான நிலைப்பாடு, அபிலாசைகள் பற்றி சர்வதேச சமூகத்துக்குத் தொடர்ச்சியாக நாம் வெளிப்படுத்த வேண்டிய நிலைப்பாட்டில் இருக்கிறோம். அந்த வகையில் சர்வதேச சமூகத்துக்கு தமிழர் தரப்பினுடைய நியாயங்களை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பாக நாம் இந்தப் பயணத்தைப் பயன்படுத்திக்கொள்ள இருக்கிறோம்.

இதேவேளை, நாம் எங்களுடைய சர்வதேச அளவிலான அரசியல் விவகாரக் குழுவினரைச் சந்தித்து எதிர்காலத்தில் நாம் முன்னெடுக்கின்ற சில நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம். அடுத்தது சர்வதேச அளவில் எமது நிலைப்பாட்டை நாம் தெளிவாக்க இருக்கிறோம். இந்த நிலையில் இலங்கை அரசாங்கம் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்ற தூய்மையான சிந்தனையுடன் இருந்தால் அவர்கள் பேச்சுவார்த்தை மேசைக்குத் தயக்கம் இன்றி வரலாம். விடுதலைப்புலிகள் இதற்கு எந்த வகையிலும் தடையாக இல்லை. அந்த வகையில் சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு ஒரு அழுத்தத்தைக் கொடுத்துப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வர வேண்டும் என்பது எமது ஒரு செய்தியாக இருக்கிறது. இதற்கான நல்ல சந்தர்ப்பம் இப்போது கனிந்திருக்கிறது. கடந்த காலங்களில் எதிர்க்கட்சி-ஆளும் கட்சி என்பனவற்றிடையே முரண்பட்டுக் கொண்டிருந்த பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு இப்போது ஒரு நல்ல சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி கூட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை அடிப்படையில் பேச்சுக்களைத தொடர தாம் முழு ஆதரவையும் தரத் தயாராக இருப்பதாக அறிவித்திருக்கின்றது. இது நல்ல சந்தர்ப்பம்.

**★போரினால் சீரழிந்த வட-கிழக்கின் இயல்பு வாழ்வைச் சீர்படுத்துவதற்கு இந்த ஐரோப்பாவிற்கான விஜயம் வழி வகுக்கும் என நீங்கள் கருதுகிறீர்களா?**

எங்களைப் பொறுத்த வரையில் எங்களது பயணம் வட-கிழக்கின் மனிதாபிமான உதவிகளை முதன்மைப்படுத்தி வலியுறுத்துவதாக இருக்கும். ஆகவே, நாம் சர்வதேச சமூகத்திடம் இன்றைய அவசர மனிதாபிமான சேவைகள் சம்பந்தமாக உறுதியாக வலியுறுத்தி இருக்கின்றோம்.

**★வட-கிழக்கில் இனம் புரியாத கொலைகள் நடைபெறுகின்றது. இதனைப் போக்க நீங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டீர்களா?**

இன்றும் எமது மாவட்டப் பொறுப்பாளர்களைச் சந்தித்துப்பேசியிருக்கின்றோம். இந்தக் கொலைகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தான் நடைபெறுகின்றது. இந்தப் பகுதிகளில் சட்டம், ஒழுங்கைப் பேணுகின்ற அனைத்து நடவடிக்கைகளையும் அவர்களே மேற்கொண்டு வருகின்றார்கள். இந்தக் கொலைகளைக் கண்டுபிடிப்பதும், நிறுத்துவதும் அவர்களது பொறுப்பு. ஆகவே, இது தொடர்பாக, கண்காணிப்புக் குழுவுடன் இன்று பேசவிருக்கின்றோம். இதற்கான எமது ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக இருக்கின்றோம். ஏதோ ஒரு வகையில் இந்த அனாமதேய கொலைகள் நிறுத்தப்பட்டு ஒரு இயல்பு நிலை உருவாக்கப்பட வேண்டும் என்பதுதான் எமது தலைலைப்பீடத்தினதும் விருப்பமாகும்.

**★விட்டுக்கொடுப்புக்கள் எதுக்கும் இடமில்லையா?**

விடுதலைப்புலிகள் முழு அளவிலான விட்டுக்கொடுப்பைக் கொடுத்திருக்கின்றார்கள். இந்த இடைக்கால சபை யோசனைகூட ஒரு விட்டுக்கொடுப்பின் அடிப்படையில்தான் மேற்கொள்ளப்பட்டது. நாம் இதைப் பற்றிப்பேசி எமது மக்களுக்கான தீர்வைப்பெறவே நாம் முயல்கின்றோம். எனவே, எம்மிடம் விட்டுக்கொடுக்க எதுவும் இல்லை.

**★ஜெனீவா மாநாடு பற்றிக் கூறுங்கள்?**

ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் மாநாடு எமது சட்ட வல்லுனர்களைச் சந்தித்து சமாதான நடவடிக்கைகளில் அடுத்த கட்டமாக நாம் முன்னெடுக்கின்ற உபாயங்கள் பற்றி விவாதிக்க விருக்கின்றோம். அதில் எமது சட்டவல்லுனர்கள், அரசியல் நிபுணர்கள், பொறுப்பாளர்கள் அனைவரும் இணைவார்கள். இதனை நாம் முக்கியமான சந்திப்பாகக் கருதுகின்றோம். அதனைத் தொடர்ந்து மனித உரிமைகள் சம்பந்தமான விடயங்களை மேம்படுத்துவதற்கு சர்வதேச உதவிகளைப் பெறுவதும் இந்த மாநாட்டின் ஒரு பக்க வேலைத் திட்டமாக அமையும். (லோ,தீ,சோ)

# பண்பாட்டு ஊர்வலத்துடன் இடம் பெற்ற

# இரண்டாம் நாள் திருவள்ளுவர் விழா

(அலுவலசெய்தியாளர்)

கிளிநொச்சி தமிழ்ச்சங்கம் நடாத்தும் திருவள்ளுவர் விழா இறுதிநாள் நிகழ்வு நேற்றுக் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னதாக நேற்றுப் பிற்பகல் 3.45 மணிக்குக் கிளிநொச்சி முருகன் ஆலயமுன்றலிலிருந்து திருவள்ளுவரின் திருவுருப்படம் தாங்கிய ஊர்தி, தமிழிசைப் பாடல்கள்,நாட்டுக்கூத்து ஆகியவற்றுடன் பண்பாட்டு ஊர்வலம் ஆரம்பமாகி மங்கலவாத்திய இசையுடன் பிரதான வீதி வழியாகப் பிற்பகல் 5.00 மணிக்கு பண்பாட்டு மண்டபத்தினை வந்தடைந்து நிகழ்வுகள் ஆரம்பமாகியது.



பொதுச்சுடரினை கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளார் பொன் நித்தியானந்தம் ஏற்றிவைத்தார்.தமிழீழ தேசியக்கொடியினை கிளி.மாவட்ட வெகுசன அமைப்புக்களின் தலைவர் சு.பசுபதிப்பிள்ளை ஏற்றி வைக்க, தமிழ்ச்சங்க கொடியினை சங்கச்செயலர் பரமநாதபிள்ளை ஏற்றிவைத்தார். மங்கலவிலக்கேற்றலினைத் தொடர்ந்து மண்டப நிகழ்வுகள் ஆரம்பமாகின.

(சோ)

# புதிய ஆயுத உபகரணப்பயிற்சி சிறில.பொலிசாருக்கு அமெ.வழங்கும்

சிறிலங்காப் பொலிசாருக்கு அமெரிக்கா புதிய ஆயுத உபகரண மற்றும் அது தொடர்பான பயிற்சிகளை வழங்கவுள்ளது. அமெரிக்க நிதியமைச்சின் கீழ் இயங்கும் சர்வதேச குற்றவியல் விசாரணைப் பயிற்சி உதவித் திட்டத்தின் கீழ் இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்திற்காக 250 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த திட்டத்திற்கான ஒப்பந்தம் நேற்று அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லங்ஸ்டட் மற்றும் சிறிலங்காவின் அதிபர் இந்திரா டி சில்வா ஆகியோரால் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் ஆயுட்காலம் 2 வருடங்களாகும். (32)

## மின்சாரம் தடைப்படல்

A-9 வீதியில் டிப்போ சந்திக்கும் பரவிப்பாஞ்சானுக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள மின்கம்பிகளை மாற்றித் திருத்த வேண்டியுள்ளதால் நாளை காலை 07.30 மணி தொடக்கம் மாலை 06.30 மணி வரை மின்சாரம் தடைப்படுமென மின்சார சபையினர் வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கின்றனர்.

# போதைப்பொருள் வில்லைகளை விழுங்கி வந்தோர் கைது.

சுமார் 40 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருட்களை விழுங்கிய நிலையில் கடத்தி வந்த இரண்டு பாகிஸ்தானியர்கள் கட்டுநாயக்க வானூர்தித் தளத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவரின் வயிற்றுக்குள் இருந்தும் 151 ஹெரோயின் வில்லைகள் அறுவைச் சிகிச்சையின் மூலம் எடுக்கப்பட்டன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது (32)

# அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி விலகாமல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்

## –எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

ஜே.வி.பி அரசாங்கத்தில் இருந்து விலகிக்கொள்ளாமல் அரசாங்கத்தில் இருந்தே தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என எதிர்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுள்ளார். நேற்று மொரட்டுவையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதிக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், தாம் எதிர்வரும் வருடம் சனாதிபதிப் பதவிக்குத் தெரிவானதன் பின்னர் நாட்டில் உடனடியாக சமாதானத்தை ஏற்படுத்தி ஏற்கனவே தமது அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியின் படி மூன்றாம் ஆண்டுக்கான அபிவிருத்தியை மேற்கொள்ளப் போவதாக அவர் குறிப்பிட்டார். தமது ஆட்சியில் வரி மன்னிப்புச் சட்டத்தை கொண்டு வந்த போது நாட்டில் உள்ள கறுப்புப் பணங்களை வெளிக்கொணர்வதே தமது நோக்கமாக இருந்தது. இந்த நிலையில் அரசாங்கத்தின் வரி மன்னிப்புத் திருத்தச் சட்ட மூலத்திற்கு தாம் எதிர்ப்பில்லை எனக் குறிப்பிட்ட அவர் அரசாங்கம் இந்தச் சட்டத்தின் மூலம் பெறும் 20 ஆயிரம் கோடி ரூபாவின் மூலம் நாட்டின் பட்டதாரிகளுக்கு வேலையும், அரசாங்க ஊழியர்களுக்கும் 70 வீத சம்பள உயர்வையும் வாக்குறுதி வழங்கிய படி வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். நாட்டில் தமது முன்னைய ஆட்சியின் போது சனாதிபதியும் ஜே.வி.பி. யினரும் தமக்கு பிரச்சினைகளைக் கொடுத்து வந்ததாக அவர் குற்றம் சுமத்தினார். இன்று சனாதிபதியும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும், ஜே.வி.பி யின் விமல் வீரவன்சவும் இணைந்து நாட்டை பாதாளத்துக்கு தள்ளி விட்டுள்ளதாக குற்றம் சுமத்திய ரணில் விக்கிரமசிங்க, அடுத்த ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்து நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லும் என உறுதியளித்தார். நாட்டில் அமைதியையும் அபிவிருத்தியையும் கொண்டு வர மக்கள் இரண்டு வருடங்களுக்கு மாத்திரம் கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டும். ஐக்கிய தேசிய கட்சியின் காலத்தில் தாம் கூறிய போது மக்கள் தம்மைத் தூற்றியதாகத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க இன்று இந்த உண்மைக் கருத்தை உணர்வதாகத் தெரிவித்தார். நடைமுறையில் அரசாங்கப் பங்காளியாக இருந்தாலும் ஜே.வி.பி பொருட்களின் விலையுயர்வு விடத்தில் தமக்குப் பொறுப்பில்லை எனக் காட்ட முனைவதாகவும் அவர் தெரிவித்தார். அரசாங்கம் தற்சமயம் இடைக்கால நிர்வாக அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என அவர் மீண்டும் வேண்டுகோள் விடுத்தார். (32)

# உரத்தின் விலை 350 ரூபா அதிகரிப்பு எனினும் மானியமாக வழங்கப்படுமாம்

## –விவசாயத்துறை அமைச்சர் கூறுகிறார்

விவசாயிகளுக்கு வழங்கப்படும் இரசாயன பசளைகளுக்கான மானியத்தை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாயத் துறை அமைச்சர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நேற்றுமுன்தினம் திறைசேரி அதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. உலக சந்தையில் இரசாயன பசளைகளின் விலை உயர்ந்துள்ளது. இதனையடுத்து 537 ரூபாவாக தற்சமயம் விற்பனை செய்யப்பட்டு வரும் யூரியா 50 கிலோ கிராம் உறை ஒன்றின் விலை 837 ஆக உயர்த்தப்படவேண்டும். எனினும் இந்தப் பளுவை விவசாயிகளின் மீது சுமத்தாமல் அதனை அரசாங்கமே பொறுப்பேற்றுக்கொள்ளவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக விவசாயிகள் தொடர்ந்தும் யூரியாவை 837 ரூபாவுக்கே கொள்வனவு செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

## சனாதிபதி நாடு திரும்பினார்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 59 ஆவது அமர்வில் பங்கேற்பதற்காக நியுயோர்க் சென்றிருந்த சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்றுக் கொழும்பு திரும்பினார். மாலை 4. 41 அளவில் டுபாயிலிருந்து வந்த வானூர்தியின் மூலமே சனாதிபதி நாட்டுக்குத் திரும்பினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

### தமிழீழ....

வாகத் துறையின் சட்டவாக்கச் செயலகத்தினால் வெளியிடப்பட்ட சட்டங்களின் 18ஆவது சட்டமாக இச்சட்டம் வெளிவருகிறது.

இவ்வாறு வரும் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் இச் சட்டமானது தமிழீழ குற்றச்சாட்டுக்களின் நடைமுறைகளை ஒழுங்கமைத்து நெறிப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட சட்டமாகும். இச் சட்டம் தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு. வே.பிரபாகரன் அவர்களின் ஒப்புகையுடன் ஆக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(லோ,தீ)

### வீர வணக்க...

சபை உறுப்பினர் சர்வேஸ்வரன ஆகியோரின் வீரவணக்க உரையைத் தொடர்ந்து திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்திற்கு எடுத்துவரப்பட்டு பி.ப 5.00 மணிக்கு நினைவுக்கல் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது. போராளிகள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### யாழ்...

இக் கொலைக் குற்றங்களைப் புலிகள் மீது அபாண்டமாகச் சுமத்திக்கொண்டு ஈ.பி.டி.பியினர் தங்கள் கொலைவெறியாட்டத்தை நடத்தி வருகின்றனர். இக் கொலைகள் அவர்க ளின் உள்முரண்பாடுகளினாலும், தனிப்பட்ட காரணங்களாலும் அவர்களினால் மேற்கொள்ளப்படும் தனிநபர் கொலைகள்தான் எனத் தெரிய வந்துள்ளது என்பதைத் தெரியப்படுத்த விரும்புகிறோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தென்னமரவடி...

திருப்பதாவது; பதவி சிறிபுரப் பிரதேசத்தில் சிறிபுரச் சந்தியைச் சேர்ந்த உக்குபண்டா அனுரா என்பவர் தென்னமரவடியில் ஏரம்பு தர்மலிங்கம் என்பவருக்குச் சொந்தமான தில்லை மருவெளி, நல்லநாதர் ஊத்துபுலவு என்னுமிடத்தில் உள்ள நான்கு ஏக்கர் வயலை பலாற்காரமாக உழவு செய்துள்ளார். அதே இடத்தில் வினாசித்தம்பி கனகையாவின்வாரிசுகளுக்குச் சொந்தமான 2ஏக்கர் வயல் நிலத்தை பலாத்காரமாக குணே என்பவர் உழவு செய்துள்ளார். வினாசித்தம்பி கனகையாவும் அவரின் மனைவி சேதுப்பிள்ளையும் தென்னமரவடிக் கிராமத்தின் மீது 1984இல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது கொல்லப்பட்டனர். அத் தாக்குதலில் தென்னமரவடிக்கிராமத்தில் வாழ்ந்த 175 தமிழ்க் குடும்பங்கள் இடம் பெயர்ந்தன

1984வரை தென்னமரவடி வயல்நிலங்கள் அவற்றின் சொந்தக்காரர்களினாலேயே செய்கை பண்ணப்பட்டு வந்தன. இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் இக் கிராமத்திற்குச் செல்லத் தயாராகி வருகின்றனர். சில மாதங்களுக்கு முன்பு என்னுடன் சில இடம் பெயர்ந்த குடும்பங்கள் தென்னமரவடி சென்றனர். இப்போது உரிமையாளர்கள் தங்கள் சொந்த நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாதவாறு தடுக்கப்படுகின்றனர். யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்த பின்னர் இப் பலாத்காரப் பயிர்ச்செய்கையில் குறிப்பிட்ட சிலர் ஈடுபடுகின்றனர். இச் செயல் அமைதிக்கு பாரதூரமான தீமையை ஏற்படுத்தும். சட்டபூர்வ உரிமையாளர்கள் தங்கள் காணிகளுக்குத் திரும்பி இயல்பு வாழ்க்கையை ஆரம்பிப்பதை இந்த நடவடிக்கைகள் தடுக்கும் இப் பாரதூரமான செயல் நிறுத்தப்படவேண்டும், சட்டபூர்வ உரிமையாளர்கள் தங்களின் காணிகளுக்குரிய ஆட்சி உரிமையை பெறவேண்டும். இக் காணிகள் திருமலை நிர்வாக மற்றும் தேர்தல் மாவட்டத்திற்குள் அமைந்துள்ளன. ஆனால் தற்காலிகமாக அநுராதபுர பொலிஸ் பிரிவின் கீழ் இக்கிராமத்தின் பொலிஸ் நிர்வாகம் கொண்டுவரப்பட்டது. திருமலைப் பொலிஸ் பிரிவின் கீழ் இது இன்னும் கொண்டுவரப்படவில்லை. எனவே இக்கணிகளில் அத்துமீறி விவசாயம் செய்வோர் மீதுநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சம்பந்தன் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். கடிதத்தின் பிரதிகள் திருமலை மாவட்ட அரச அதிபர், அநுராதபுரம் பிரதிப் பொலிஸ்மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அதிபர், குச்சவெளிப் பிரதேசசெயலர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (25)

### இராணுவக்.

சமாதானத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் உள்வீட்டுக்காரர்களின் வேலையாகவே இவை தோன்றுகின்றது. அத்துடன் புலிகளுக்கு எதிராக கருத்து வேறுபாடுடைய, கைவிடப்பட்ட மாற்றுக் குழுகளின் பங்களிப்புடன் இக்கொலைகள் நடைபெறலாம் எனவும் தெரிவித்த அவர் குற்றவாளிகளின் வெளிபடையாகத் தோன்றாது மறைவான சூழ்நிலையிலேயே இருப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் டொன்புறூவ் கொவ்டேயுடனான மற் றொரு சந்திப்பில் இவ் விடயம் குறித்து விரிவாகக் கலந்துரையாடினார்.

சிறிலங்கா அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் தகவல்களைப் பரிமாறிக் கொண்டு சம்பந்தப்பட்ட குற்றச் செயல்களை கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும் என்ற கண்காணிப்புக் குழுவின் பிரேரணைக்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐரோப்பாவுக்கான பயணத்தில் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா, மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் ஜோர்ஜ் ஆகியோர் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் இருந்து நேற்றுப் பிற்பகல் 1.00 மணிக்கு விசேட உலங்குவானூர்தி மூலம் புறப்பட்டு கொழும்பைச் சென்றடைந்துள்ளனர். அங்கிருந்து இன்று காலை ஐரோப்பிய நாட்டுக்கான தமது பயணத்தை மேற்கொள்வர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இவர்களுடன் தமிழீழ மகளிர் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் கீதா, சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த செல்வி, சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கொழும்பில் இருந்து இவர்களுடன் இணைந்து கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (லோ,தீ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.